# வட அயர்லாந்துக்கு மேலும் பிரி. துருப்புகள் போகின்றன

Registered as a News paper in Ceylon விலை சதம் 15 ★ ★

ஈழநாடு சந்தா
தினப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒரு வருடம் — ரூ. 66-00

ஈழநாடு
THE EELA NADU
EELANADU

மலர் 1
இதழ்: 215
தபால் பெட்டி எண் 49
போன்: 389
National Tamil Daily
தேசிய தினசரி

ஈழநாடு சந்தா
வாரப்பதிப்பு மாத்திரம்
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற் பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

யாழ்ப்பாணம் ஆவணி 30 றஜப் 2 திங்கட்கிழமை [15-9-69]

## மீண்டும் மோதல்கள் வெடித்ததின் எதிரொலி

பெல்பாஸ்ட், செப். 14

வட அயர்லாந்தில் மீண்டும் குழப்பங்கள் ஆரம்பமானதைத் தொடர்ந்து மேலும் ஏராளமான பிரிட்டிஷ் துருப்புகள் அங்கு அனுப்பப்பட்டுள்ளன.

வட அயர்லாந்தில் கத்தோலிக்கர்களுக்கும் புரட்டஸ்தாந்து கிறிஸ்தவர்களுக்குமிடையில் வகுப்புக்கலவரங்கள் ஏற்பட்டதைத் தொடர்ந்து அண்மையில் அங்கு அமைதியை நிலைநாட்டுவதற்காக அங்கு அனுப்பப்பட்டனர். பிரிட்டிஷ் துருப்புகள் அங்கு சென்று இரு பிரிவினருக்குமிடையில் மோதல்கள் ஏற்படுவதைத் தடுத்தார்கள். புரட்டஸ்தாந்து கிறிஸ்தவர்களுக்கும் ரோமன் கத்தோலிக்கர்களுக்கும் இடையில் தொடர்ந்து மோதல்கள் ஏற்படாதவண்ணம் பிரிட்டிஷ் படையினர் இருபிரிவினரும் வாழும் பகுதிகளைப் பிரிக்கும் வகையில் முள்ளுக்கம்பிவேலிகள் அமைத்து முடித்தனர். என்றாலும் மீண்டும் இப்பொழுது இருதரப்பினருக்குமிடையில் மோதல்கள் ஏற்பட்டதால் மேற்கொண்டும் பிரிட்டிஷ் துருப்புகள் அங்கு அனுப்பப்பட்டனர்.

வட அயர்லாந்தில் கத்தோலிக்கர்கள்தமது உரிமைகள் பராமரிக்கப்படுவதில்லையென்று குற்றஞ்சாட்டியுள்ளனர். இருதரப்புகளையும் சேர்ந்த மதத்தலைவர்கள் அமைதியாய் இருக்கும்படி மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## கரையூர் பாஷையூர் மக்களுக்கு காணி

### மாநகரசபை உறுப்பினர் முயற்சி

யாழ்ப்பாணம், திங்கள்

கரையூர் பாஷையூர் கடல் நிரப்பி காணி வழங்கும் திட்டம்பற்றி மாநகரசபை உறுப்பினர்களான டாக்டர் ஏ. எல். ஏபிரகாம் திருமதி அந்தோனியா சுவாமிநாதர் ஆகியோர் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் திரு. பீட்டர்ஸ்சை சந்தித்துப்பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.

கடலுக்கு நடுவில் மதில் கட்டி மண்நிரப்புவது பற்றி காணி நீர்ப்பாசன மந்திரி கடற்றொழில் மந்திரி ஆகியோருடன் தொடர்பு கொண்டபின் முடிவை அறிவிப்பதாக அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

## உள்ளூராட்சி ஊழியர் சம்பள உயர்வு

கொழும்பு, திங்கள்

இடைக்கால சம்பள அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட சிபார்சுகளின்படி உள்ளூராட்சி மன்ற ஊழியர்களின் சம்பளத்தையும் அக்டோபர் ஒன்றிலிருந்து உயர்த்தப்படவேண்டுமென உள்ளூராட்சி அமைச்சர் திரு ஆர் பிரேமதாசா உத்தரவிட்டுள்ளார்.

## மின்சார சபை நவம்பர் 1-ல்

கோட்டை, திங்கள்

மின்சாரப் பகுதியை மின்சாரச் சபையிடம் ஒப்படைப்பதற்கான திகதி நவம்பர் 1ம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது. முன்னர் அக்டோபர் 1-ல் பொறுப்பேற்பதெனமுடிவுசெய்யப்பட்டிருந்தது.

### வட பகுதியிலுள்ள

# பெற்ரோலியம்-கடற்றொழில்இலாகா பொலிஸ்இராணுவ கண்காணிப்பில்

## மண்ணெண்ணெக்குப்பெருந்தட்டுப்பாடு

### ரோந்து நடவடிக்கை அதிகரிப்பு

யாழ்ப்பாணம், திங்கள்

பெற்ரோலியம், கடற்றொழில் கூட்டுஸ்தாபனங்களில் தொடர்ந்து வேலைநிறுத்தம் நடைபெறுவதால் வடபகுதியிலுள்ள பெற்ரோலியம், கடற்றொழில் இலாகா அலுவலகங்களில் ஆயுதம் தாங்கிய பொலிஸார் நேற்றுக் காலை முதல் காவல் புரிந்து வருகின்றனர்.

வடபகுதி இராணுவ சிப்பாய்களும் ரோந்து சுற்றும் விசேஷ கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பொலிஸ் தலைமைக்காரியாலயத்திலிருந்து கிடைத்த உத்தரவைத் தொடர்ந்து வட பகுதி உயர்தர பொலிஸ்அதிகாரிகள் நேற்று ரகசியமாகக் கூடி நிலைமையை ஆராந்தனர். வட பகுதி இராணுவ அதிகாரிகளுடனும் பொலிஸ் சுப்பிரின்டன் இது சம்பந்தமாக பேச்சுவார்த்தை நடாத்திய லும் பெற்ரோல், மண்ணெண்ணை, ஒயில் ஆகியவற்றுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

எந்தக் கடையிலாவது பெற்ரோல், மண்ணெண்ணை பதுக்கப்பட்டாலோ, அல்லது கூடுதலான விலைக்கு விற்கப்பட்டாலோ தமக்கு தகவல் தெரிவுக்குமாறு பொலிஸார் பொதுமக்

## நள்ளிரவில் துணிகர திருட்டு

சுழிபுரம், ஞாயிறு

சுழிபுரம்- நெல்லியான் ரேட்டுக்கு அருகாமையிலுள்ள திரு சி நாகலிங்கம்என்பவரின் வீட்டில் நேற்று நள்ளிரவு வீட்டுக்கூரை ஒடு பிரித்து மிகவும் துணிகரமான

### வெள்ளைக்கடற்கரை

## பள்ளிவ சலில் ஞாபகார்த்த விழா

யாழ்ப்பாணம் திங்கள்

வேலணை வெள்ளைக் கடற்கரைப் பள்ளிவாசலில் அடங்கப்பெற்றிருக்கும் ஹஸூரத் அஸ்ஸெய்யிதுனா சுல்தான் அப்துல்காதர் காதிறுவொலியுல்லாவின் ஞாபகார்த்த விழா கடந்த 13-ம் திகதி கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகியுள்ளது,

இதை முன்னிட்டு 23-ம் 24-ம், 25ம் திகதிகளில் விசேஷ நிகழ்ச்சிகள் இடம்பெறும், அல்லைப்பிட்டிக் கிராமசபைத் தலைவரினதும் மேற்படி பள்ளிவாசல் பா[illegible]லன சபையினரதும் தீவிர முயற்சியினால் நடைபெறவிருக்கு[illegible] வுக்கு யா[illegible] லிருந்து விசேஷ பஸ் சேவைக்கான

## அத்தியாவசிய சேவை பிரகடனம் நீங்கியது

கோட்டை, திங்கள்

மின்சாரப் பகுதி, பெற்ரோலியம் கூட்டுத்தாபனம் ஆகியன மீது விதிக்கப்பட்டிருந்த அத்தியாவசிய சேவைப் பிரகடனம் நீக்கப்பட்டுள்ளது. மின்சாரப்பகுதி ஊழியர்கள் அனைவரும் வேலைக்குத்திரும்பிவிட்டபோதிலும் பெற்ரோலியம் கூட்டுத்தாபன ஊழியர் தொடர்ந்து வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ஆனால் பெற்ரோலியம்கூட்டுத்தாபன வேலையை ராணுவம் பொறுப்பேற்றுள்ளது.

கொலன்னாவை பெ[illegible]ரோலியம் வேலைத்தளத்திலிருந்து 200 லொறிகளில் நேற்று பெற்ரோல், மண்ணெண்ணை எடுத்துச் செல்லப்பட்டுப்பட்டதாகவும் வழமைபோல் பெற்ரோல், மண்ணெண்ணை விநியோகம் நடைபெறுவதாகவும் ஒரு அறிக்கை கூறுகிறது.

### வசாவிளான் கொலை வழக்கு

# அட்டோர்னி ஜெனரல் உத்தரவு

## நீதிபதி எதிரியை விடுதலை செய்தார்

மல்லாகம் ஞாயிறு

வசாவிளான் கொலைவழக்கின் எதிரியை மல்லாகம் நீதிபதி திரு. எஸ் ஆனந்தகுமாரசாமி அட்டோர்னி ஜெனரலின் உத்தரவை முத்து இராமு என்பவரை சுட்டுக்கொலை செய்ததாக கே. வீ, சுப்பிரமணியம் மீது காங்கேசன்துறைப் பொலிசார் இவ் வழக்கை தொடர்ந்திருந்தனர், யால் சுப்ரீம் கோர்ட்டிற்கு பாரப்படுத்தப்பட்டிருந்தது,

எதிரி சார்பில் கீழ்கோர்ட்டில் சிரேஷ்ட வழக்கறிஞர் ஜி.ஜி. பொன்னம்பலம் ஆஜ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையை ஆராந்தனர். வடபகுதி இராணுவ அதிகாரிகளுடனும் பொலிஸ் சுப்பிரின்டன் இது சம்பந்தமாக பேச்சுவார்த்தை நடாத்தியதாகத் தெரிகின்றது.

முக்கிய இடங்களிலும், பெற்றோல் தாங்கி நிலையங்களிலும் பொலிஸாரின் கண்காணிப்பு ஏற்படுத்தப் பட்டுள்ளது வீதிகள் எங்கும் பொலிஸாரும், இராணுவத்தினரும் கூட்டாக ரோந்து சுற்றுகின்றனர்.

நகரின் சகல பகுதிகளிபதுக்கப்பட்டாலோ, அல்லது கூடுதலான விலைக்கு விறகப்பட்டாலோ தமக்கு தகவல் தெரிவுக்குமாறு பொலிஸார் பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

வேலை நிறுத்தத்தால் அசம்பாவிதம் எதுவும் ஏற்படவில்லையென்றும் நிலைமை கட்டுக் கடங்கியிருப்பதாகவும் வடபகுதி பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (கா. நி)

யாழ். ஆஸ்பத்திரியில் நடந்தது

## 'பெற்றோமாக்ஸ்', 'டோர்ச் லைட்' வெளிச்சத்தில் சத்திர சிகிச்சை

யாழ்ப்பாணம், திங்கள்

'பெற்றோமாக்ஸ்', 'டோர்ச் லைட்' ஆகியவைகளின் வெளிச்ச உதவியோடு ஒரு நோயாளிக்கு சத்திர சிகிச்சை செய்யப்பட்ட சம்பவம் கடந்த இரவு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி சத்திர சிகிச்சை அறையில் நடந்தது.

மின்சார ஊழியர்களின் வேலைநிறுத்தத்தால் தான் இந்த நிலை ஏற்பட்டது.

கர்ப்பிணிப் பெண் ஒருவருக்கு நள்ளிரவு நேரம் திடீரென சத்திரசிகிச்சை செய்யவேண்டிய நிலை ஏற்பட்டதால் டாக்டர் க. கணேசன் மின்சாரவெளிச்சத்தையும் எதிர்பார்க்காமல் 'பெற்றோமாக்ஸ்', 'டோச் லைட்' வெளிச்சங்களுடன் இதனை வெற்றிகரமாகச் செய்து முடித்தார்.

இச்சத்திர சிகிச்சை சுமார் ஒரு மணி நேரம் நடைபெற்றது. இலங்கையின் இரண்டாவது பெரிய ஆஸ்பத்திரியாக யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி இருந்தும், அவசர தேவைக்கான ஒரு 'உப மின் இயக்கம்' இல்லாதது பற்றி சுகாதார உயர் அதிகாரிகள் கவலை தெரிவித்தனர்.

# மின்சார ஊழியர் வேலைக்குத்திரும்பினர்

கோட்டை, ஞாயிறு

மின்சார ஊழியர் வேலைநிறுத்தம் விலக்கிக் கொள்ளப்பட்டிருப்பதாகவும், ஏராளமான மின்சார ஊழியர்கள் வேலைக்குத் திரும்பிவிட்டதாகவும் அரசாங்கம் அறிவித்திருக்கிறது.

பெட்ரோலியம் கூட்டுத்தாபன வேலைநிறுத்தம் நீடிக்கிறது. இதற்கிடையில் நாட்டின் அத்தியாவசிய சேவைகள் பாதிக்கப்படாதிருக்கும் வகையில் அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கின்றது.

நேற்று வேலைநிறுத்தத்தில் இறங்கிய 6000 மின்சார ஊழியர்களின் வேலைநிறுத்தம் விலக்கிக்கொள்ளப்பட்டதாகவும், ஸ்தம்பித்திருந்த மின்சாரம் மீண்டும் விநியோகிக்கப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டது.

எண்ணெய்க் குதங்கள் மின்சார நிலையங்கள் போன்றவற்றைப் பொலிசாரும் இராணுவத்தினரும் காவல்புரிகின்றனர்.

## தற்கொலை

அல்லைப்பிட்டி, ஞாயிறு

கரம்பன் தெற்கைச் சேர்ந்த விஞசித்தம்பி வேலுப்பிள்ளை என்னும் ஐந்து பிள்ளைகளின் தந்தை இரத்தக் கொதிப்பு நோயின் காரணமாக நச்சுத் திராவகம் அருந்தித் தற்கொலைசெய்து கொண்டார். இதுசம்பந்தமாக மரணவிசாரணை நடத்திய வேலணைப் பகுதி திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். மகாலிங்கம் தற்கொலையெனத் தீர்ப்பளித்தார்.

## தீவுப்பகுதி எம். பி. யிடம் கோரிக்கை

அல்லைப்பிட்டி, ஞாயிறு

வேலணை கிராம ஆஸ்பத்திரிக்கு அரசினரல் வழங்கப்பட்ட ரூபா 1 1/2 லட்சத்தையும் பெற்று மேற்படி ஆஸ்பத்திரியை நவீனவசதிகள் கொண்டதாய் விஸ்தரிக்கநடவடிக்கை எடுக்கும்படி தீவுப்பகுதி ஐக்கிய இளைஞர் முன்னேற்றக்கழகத்தினர் தீவுப்பகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு வ. நவரத்தினத்தைக் கேட்டுள்ளனர்.

...ள்ள திரு சி நாகலிங்கம்என்பவரின் வீட்டில் நேற்று நள்ளிரவு வீட்டுக்கூரை ஓடு பிரித்து மிகவும் துணிகரமான முறையில் திருட்டு நடைபெற்றுள்ளது.

திரு நாகலிங்கமும் அவரது மனைவியும் வீட்டில் நித்திரையாக இருக்கையில், வீட்டுக் கூரை பிரிக்கப்பட்டு மனைவியின் கழுத்திலிருந்த 17 பவுண் பெறுமதியான தாலிக் கொடியை களட்டிக் கொண்டு திருடர்கள் சென்றுள்ளதாகத் தெரியவருகிறது

## வேலை நிறுத்தக்காரரை கண்காணிக்கும்படி உத்தரவு

கோட்டை, ஞாயிறு

அரசாங்க இலாகாக்களிலும் மற்றும் கூட்டுத்தாபனங்களிலும் தொழில்புரியும் ஊழியர்களை வேலைநிறுத்தத்தில் ஈடுபடுமாறு வேலைநிறுத்தக்காரர் தூண்டுகிறார்களா என்பதைக் கண்காணிக்குமாறு பொலிஸ் இலாகாவுக்கு அரசாங்கம் அறிவித்துள்ளது. இதைத் தொடர்ந்து பொலிசார் வேலைநிறுத்தக்காரர்மீது தீவிரகண்காணிப்புச் செலுத்திவருகின்றனர்.

சில தொழிற்சங்கங்களின் அங்கத்தவர்கள் அரசியல் காரணங்களை கொண்டு வேலையில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களை கட்டாயப்படுத்தி வேலைநிறுத்தத்தில் ஈடுபடும்படி நிர்ப்பந்திப்பதாகக் கிடைக்கப்பெற்ற புகார்களைத் தொடர்ந்தே மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது

தீவிர முயற்சியினுல் நடைபெறவிருக்கும் இவ் விழாவுக்கு யாழ்ப்பாணத்திலிருந்து விசேஷ பஸ் சேவைக்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

கொலன்னுவை ...லியம் வேலைத்தளத்திலிருந்து 200லொறிகளில் நேற்று பெற்றோல், மண்ணெண்ணை எடுத்துச் செல்லப்பட்டு நாடெங்கும் விநியோகிக்கப்

## ஆட்சேப கூட்டத்தில் எஸ்.ஜே.வி ,ஜி.ஜி. கலந்துகொள்வர்

யாழ்ப்பாணம், திங்கள்

இம்மாதம் 16-ம் தேதி யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில் நடைபெறவிருந்த வடமாகாண ஆசிரிய சங்கக் கூட்டம் இம்மாதம் 23-ம் தேதிநடைபெறவிருக்கிறது.

தேசிய ஆசிரிய சங்க உத்தியோகத்தர்களான திரு. இ சிவஞேசன், திரு ஜே சந்தியாப்பிள்ளை ஆகியோரின் இடமாற்றத்தை ஆட்சேபித்து அவர்களின் இடமாற்றம் ரத்துச்செய்யப்பட வேண்டும் அல்லது பாரபட்ச மற்ற விசாரணை நடத்த வேண்டுமென்று கோரி இக்கூட்டம் நடத்தப்படவிருக்கிறது.

இக் கூடடத்தில் தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு ஜி. ஜி. பொன்னம்பலம் தமிழரசுக் கட்சித் தலைவர் திரு எஸ் ஜே வி செல்வநாயகம் செனட்டர் எஸ் நடராசா மற்றும் ஆசிரிய சங்கப் பிரதிநிதிகளும் வேறு தொழிற் சங்கப் பிரதிநிதிகளும் சொற்பொழிவாற்றுவார்கள்.

பூநகரி காட்டு சடலம்

## அடையாளம் காணுமல் அரசாங்க செலவில் அடக்கம்

யாழ்ப்பாணம், திங்கள்

பூனகரியிலுள்ள நடுக்காட்டில் தொங்கிக் கொண்டிருந்த ஆணின் சடலமொன்று இறுதி வரை அடையாளம் காணப்படாமலேயே அரசாங்க செலவில் அடக்கம் செய்யப்பட்டது

சிறு தாடியுடன் சுமார் 48 வயது மதிக்கத்தக்க இச் சடலம் பெனியன்ன்று மாத்திரம் அணியப்பட்டு அரை நிர்வாணமாக 12 அடி உயரத்தில் மரத்தில் தொங்கிக் கொண்டிருந்தது.

சடலத்தின் கீழே பச்சை நிறச் சாரம், துவாய், கயிறு கொண்டுவரப்பட்ட கடதாசிப் பை ஆகியனவும் காணப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சுமார் ஒரு வாரத்துக்கு முன்னர் மரணமானவர் இறந்திருக்கலாமென பிரேத பரிசோதனை செய்த சட்ட வைத்திய அதிகாரி திரு. கே. பாலசிங்கம் தெரிவித்தார்.

மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் தக்கொலை என்று தீர்ப்பளித்தார். சவம் அடையாளம் காணப்படாததால் அரசாங்க செலவிலேயே அடக்கம் செய்யப்பட்டது. (கா. நி)

## சேரி ஒழிப்பு வேலை ள்

யாழ்ப்பாணம், திங்கள்

சேரி ஒழிப்புத்திட்டத்தின் கீழ் பாஷையூரில் 8 வீடுகள் அமைக்கும் வேலையை 7-ம் வட்டார உறுப்பினர் திரு. ஏ. போல்ராஜ் நேற்றுமுன்தினம் ஆரம்பித்துவைத்தார்

...கின் எதிரியை மல்லாகம் நீதிபதி திரு. எஸ் ஆனந்தகுமாரசாமி அட்டோர்னி ஜெனரலின் உத்தரவை யடுத்து விடுதலை செய்தார்.

விளக்கமறியலிலிருந்துநீதிமன்றம் கொண்டுவரப்பட்ட எதிரிக்கு நீதிபதி விடுதலை வழங்கியதைக் கூறியதும் எதிரி நீதிமன்றத்தை விட்டு வெளியேறினுர்,

கடந்த வருடம் ஏப்ரல் மாதம் 9-ம் திகதி வசாவிளான் வாசியான தம்பி கே. வீ, சுப்பிரமணியம் மீது காங்கேசன்துறைப் பொலிசார் இவ் வழக்கை தொடர்ந்திருந்தனர்,

வழக்கு விசாரணையின் பின் மல்லாகம் நீதிபதி ...தது,

எதிரி சார்பில் கீழ்கோர்ட்டில் சிரேஷ்ட வழக்கறிஞர் ஜி,ஜி. பொன்னம்பலம் ஆஜராகியிருந்தார்.

## சதுர்த்திதிருவிழா

சித்தன்கேணி, திங்கள்

வட்டுப்-பிலவத்தை கற்பகப்பிள்ளையார் கோவிலில் விநாயகசதுர்த்தித்திருவிழா நடைபெறுகின்றது. இன்றுடன் பூர்த்தியாகும் 10-வது நாள் உற்சவத்தின்போது இரவில்விநாயகப்பெருமான் மஞ்சத்தில் எழுந்தருளிப் பின்னர் திருஊஞ்சலும்நடைபெறும் பகலில் விசேஷ அபிஷேகங்களும் தேவாரப் பண்ணிசைத் திருமுறைகளும் இடம் பெறுகின்றன.

திருகோணமலையில் நிறுவினால்

## முஸ்லிம் பல்கலைக்கழகம் என்று பெயரிடுக'

—ஆர். ஜி.

கொழும்பு, திங்கள்

'திருகோணமலையில் தமிழ் பல்கலைக்கழகம் கோருவதற்குத் தமிழரசுக்கட்சிக்கு உரிமையில்லை. அப்படிப் பல்கலைக்கழகம் நிறுவுவதானுல் முஸ்லிம் பல்கலைக்கழகம் என்றே பெயரிடவேண்டும். முஸ்லிம்களே அங்கு கூட வாழ்கிறார்கள்'

தம்பதெனியா எம். பி. திரு.ஆர். ஜி. சேனநாயகா, நேற்று ஆட்சிமன்றத்தில் மேற்கண்டவாறு கூறினுர். கல்வி அமைச்சின் நிதிஒதுக்கீடு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இப்படிக்கூறினுர்.

வடபகுதியிலுள்ள மூன்று பௌத்தபாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றது குறித்து ஆர்.ஜி. கல்வி அமைச்சரைப் பாராட்டினுர். மற்றைய இரு பாடசாலைகளையும் அரசாங்கம் விரைவில் பொறிப்பேற்க வேண்டும் என்று கூறினுர்.

வடபகுதி பௌத்த பாடசாலைகளில் சிங்களம் படிப்பிக்கப்பட வேண்டுமென்று ஆர்.ஜி. கூறியபோது, கல்வி அமைச்சர் திரு. இரியகொல்லை குறிக்கிட்டு, 'சிங்களம் ஒரு சொல்லாவது தெரியாதபிள்ளைகளுக்கு சிங்களம் எப்படிப் படிப்பிப்பது?' என்று ஆர்.ஜி.யைப் பார்த்துக் கேட்டார்.

'சிங்களம் தெரிந்தவர்களுக்கா சிங்களம் படிப்பிக்கப் போகிறீர்கள்? அப்பகுதி பெற்றோர்கள் சிங்களம் கற்பிக்கும்படி வேண்டுகிறார்கள்; பின்னர் ஏன் தயக்கம்? என்று ஆர் ஜி. கூறினுர்.

### 'தமிழ்பிள்ளைகளுக்கு நியாயம் வழங்கவில்லை'

—தீவுப்பகுதி எம், பி.

இப்போதுள்ள சூழ்நிலையில் பல்கலைக் கழகங்களில் தமிழ் பிள்ளைகளுக்கு நியாயம் வழங்கப்படுவதில்லை ஆகையால் தமிழ் பல்கலைக்கழகம் ஒன்று நிறுவப்படவேண்டும். தமிழரசு- தமிழ் காங்கிரஸ் பிளவை பயன்படுத்தி இப் பல்கலைக்கழகத்தைக் கைவிட்டுவிடக் கூடாது' என்று ஊர்காவற்றுறை எம்,பி, யும் தமிழர் சுயாட்சிக்கழகத் தலைவருமான திரு வி. நவரத்தினம் நேற்று ஆட்சிமன்றத்தில் பேசுகையில் கூறினுர்,

'தமிழரசு தமிழ்காங்கிரஸ் பிளவுபற்றி எமக்கு கவலையில்லை' என்று கல்விஅமைச்சர் திரு இரியகொல்லைஇடைமறித்து திரு நவரத்தினத்தைப் பார்த்துக் கூறினுர்,

மிகிந்தலை, ஞாயிறு

தேசிய அரசாங்கம் விவசாயிகளை உண்மையாக மதித்து அவர்களுக்கு உதவி செய்யவேண்டும் என நோக்கம்கொண்டால் நெல்லின் உத்தரவாதவிலையை 14 ரூபாவிலிருந்து 16ரூபாவாக உயர்த்தவேண்டும் எனத் தம்புத்தேகம கிராம சபை பிரதமர் திரு. டட்லி சேனநாயக்காவையும் காணிவிவசாய அமைச்சர் திரு. சி. பி. டி. சில்வாவையும் கோரியுள்ளது.

வட பகுதி அசைஸ் விசாரணை

## '2-ம் எதிரி கன்னத்தில் அடித்தார்; 1-ம் எதிரி வயிற்றில் குத்தினுர்'

### நவாலி கொலை முயற்சி வழக்கு

யாழ்ப்பாணம்திங்கள்

'சம்பவம் நடந்ததினம் இரவு 4 எதிரிகளும் என் அறையில் நின்றுர்கள் 2-ம் எதிரி டோர்ச் லைட்டால் கன்னத்தில் அடித்தபோது நான் எழுந்தேன். 1-ம் எதிரி குத்தினுர் 3-ம் எதிரியும் குத்தினுர். அதே நேரத்தில், 2-ம், 4-ம் எதிரிகள் என்னைக் கட்டிப்பிடித்துக் கொண்டிருந்தார்கள் நான் படுத்திருந்த பாய் இருந்த இடத்தில் சம்பவம் நடந்தது. என்னை இழுத்துவந்து முற்றத்தில் போட்டுவிட்டு ஓடி விட்டார்கள்.

நவாலி கொலை முயற்சி வழக்கில் சாட்சியமளித்த நல்லதம்பி இரத்தினம் மேற்கண்டவாறு கூறினுர். இவ்வழக்கு நேற்றுக்காலை வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் ஓ. எல். டி கிரெஸ்டர் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் 67-ம்ஆண்டு டிசம்பர் 3-ம் தேதி நவாலியில் கந்தையா மார்க்கண்டு, தம்பு மார்க்கண்டு, வீரபாகு அருமைத்துரை, பரமு துரைராஜா ஆகியோர், நல்லதம்பு இரத்தினம் என்பவரைக் கொலைசெய்ய முயற்சித்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் அட்வகேட் எஸ். தம்பித்துரை, புறக்டர் ஆர்.விஸ்வநாதன், புறக்டர் வி. ஏ ஈ. பாலசிங்கம் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜராணுர். வழக்கறிஞர் கே. குணரத்தனம் எதிரிகளுக்காக அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டிருந்தார். முடிக்குரிய தரப்பில் அட்வகேட் பிரியாந்த பெரேரா ஆஜராணுர்.

நல்லதம்பி இரத்தினம் சாட்சியமளிக்கையில் மேலும் கூறியதாவது:- 1-ம், 3-ம் எதிரிகளுடன் கட்டிப்பிடித்து இழுபறிப்பட்டேன் 2-ம்,4-ம்எதிரிகள் வெளியில் இழுத்து வந்தார்கள், இழுத்து வரும்போது 1-ம் எதிரி வயிற்றில் வெட்டியதால் குடல் வெளியில்வந்தது 3-ம் எதிரியும் குத்தினுர்.

எதிரிகளின் சார்பில் ஆஜரான அட்வகேட் எஸ். தம்பித்துரை, குறுக்குவிசாரணை செய்தார்.

(4-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரி. யோவான் கல்லூரி யாழ்ப்பாணம்

## பிரவேசம்—1970

1. கீழ்க்காணும் வகுப்புக்களில் மாத்திரம் இட முண்டு Grade 1 (1-1-64) Grade 4 (31-12-60) Grade 6 (31-12-58) Grade 9 (31-12-56) Grade 11 (31-12-53).

2. விண்ணப்பதாரிகள் மேற்குறித்த திகதிகட்குப் பின்னர் பிறந்திருக்கவேண்டும்.

3. செப்டெம்பர் 25-ம் திகதிக்கு முன்னர் கல்லூரியினது விண்ணப்பப்பத்திரங்களில் விண்ணப்பிக்கவும். தயவு செய்து முத்திரையிட்ட, முகவரியுள்ள தபாலுறை அனுப்பிவைக்கவும்.

4. பிரவேசப் பரீட்சை 10-10-69-ல் 4-ம், 6-ம், 9-ம், 11-ம் வகுப்புகளுக்கு நடைபெறும்.

க. பூரணம்பிள்ளை,
1-9-69. அதிபர்.
1741



''புதிய சுண்டிக்குளிச் சந்திக்கருகாமையில்''

ஏ. எவ்.
றேமண்ட்ஸ்,

147, மெயின் வீதி,
யாழ்ப்பாணம்.

குறைந்த செலவில்
மனம்நிறைந்த
அந்திய சேவை
ரூபா 175/-

உயர்தர பிரேதப் பெட்டிகள்
ரூபா 50/-



வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி 6-30, இரவு 10-00
பிரிபோயா, போயா 2-30 மணி
ஜெமினி - சரோஜாதேவி
நடித்த
வாழவைத்த தெய்வம்



வல்வெட்டித்துறை
ரஞ்சனு தியேட்டர்
தினசரி 6-30, 9-30.
பிரிபோயா, போயா காலை 10-30
தேவ் குமார், மாலாசிங்க
நடித்த
மேரேலால்



## வரி விளம்பரம்

### வாடகைக்கு

யாழ். புதிய சந்தைக்கு அண்மையில் ஒரு கடையும், லொறி கரேஜ் இரண்டும். போயா நாட்களில் பார்வையிடலாம் இ. தவராசா, 44, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 1401


## முன்னணியில் கூ. சங்கங்கள்

மானிப்பாய், ஞாயிறு

ஏழை விவசாயிகளின் தேவைகளைப் பூர்த்திசெய்வதில் இன்று கூட்டுறவுச் சங்கங்கள் முன்னணியில் திகழ்கின்றன என யாழ். கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் திரு. வி. கனகசபை, காங்கேசன்துறை ப நோ. கூ. சங்கத்தின் புடவைக்கடையைத்திறந்து வைத்துப்பேசுகையில் குறிப்பிட்டார்.

இச் சங்கம் ஆரம்பிக்கப்பட்ட குறுகிய காலத்துள் அடைந்த சிறந்த முன்னேற்றம் அங்கத்தவர்களின் ஒத்துழைப்பையும் முயற்சியையும் காட்டுவதாகுமென அவர் சொன்னார்.

## தாச்சிப்போட்டி

வேலணை, ஞாயிறு

காரியாதிகாரி பிரிவுகளுக்கான தாச்சி விளையாட்டுப் போட்டியில்தீவுப்பகுதி காரியாதிகாரிபிரிவு சாம்பியனை தேவிதோட்டம் சனசமூக நிலையமும் வலிகாமம்மேற்கு காரியாதிகாரி பிரிவு சுதுமலை சனசமூக நிலையமும் பங்குபற்றி விளையாடியபோது சுதுமலை 9பழங்களைப் பெற்றுக்கொண்டது


MANOHARA
JAFFNA
Daily 4-45, 7, & 9-45p.m
Poyadays 10-00 A,M.
Elvis Presley
in
CLAMBAKE



REGAL JAFFNA
Daily 4-45, 7-00 & 9-45p.m
Yoko Tani - Erno Crisa
in
FIRE IN THE FLESH
(Strictly for Adults)



ராணி
(யாழ்ப்பாணம்)

சிவாஜி — ஜெயலலிதா
சௌகார் ஜானகி
நடித்த


## கோப்பாய் செய்திகள்

(நமது கோப்பாய் நிருபர்)

### திட்டஅமைச்சு அனுப்பியபதில்

கடந்த ஆண்டு டிசம்பர் 22ம் திகதி அகில இலங்கை வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தாரால் திட்டமிட்டு, பொருளாதார அலுவல்கள் அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்பட்ட மகஜரொன்றுக்கு சென்ற ஆகஸ்ட் மாதம் 15ம் திகதியே பதில் கிடைத்ததாம்.

இந்த ரீதியில் தான் வேலையற்ற பட்டதாரிகள் விஷயத்திலும் அரசாங்கம் அசிரத்தை கொண்டுள்ளது என மேற்படி பட்டதாரிகள்சங்க செயலாளர் திரு. எஸ். பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

### கோரிக்கை

கோப்பாய் கிராமசபை கோப்பாய் அரசினர் ஆஸ்பத்திரிக்கு மேலதிகடாக்டர் ஒருவரையும், இரு அட்டென்டன்களையும், இலிகிதர் ஒருவரையும் உடன் நியமிக்குமாறு சுகாதார அமைச்சைக் கோரவுள்ளது.

### நினைவுதினக்கூட்டம்

திரு. கு. வன்னியசிங்கத்தின் 10வது நினைவு தினக்கூட்டம் எதிர்வரும் 17ம் திகதி மாலை ஆவரங்கால் சிவன்கோவில் மைதானத்தில் நடைபெறும்.

தமிழரசுக் கட்சி எம். பிக்கள் பலர் இதில் கலந்துரையாற்றவிருக்கிறார்கள்.

### கோப்பாய் கி.ச. அறிவிப்பு

கடந்த 61ம் ஆண்டுமுதல் இதுகாலவரை சோலைவரி கட்டத்தவறியவர்களை உடன் கந்தோரில் அதற்கான பணத்தைச் நிலுவையின்றி செலுத்தி கிராமத்தின் நிதிநிலையைச் சீராக்குமாறு கோப்பாய் கிராமசபைத்தலைவர் திரு பரமானந்தராசா மேற்படி கிராமசபை வரியிறுப்பாளர்களைக் கோரியுள்ளார்.

### ஆசிரியருக்கு அஞ்சலி

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் கடமையாற்றிய காலஞ்சென்ற தமிழ் விரிவுரையாளர் பண்டிதர் திரு. சி. கந்தையாவின் நினைவையொட்டி மாணவர்களும் ஆசிரியர்களும் இரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தினர். ஒருநாள் விடுமுறைதினமாகவும் அனுஷ்டிக்கப் பட்டது.

## உண்ணாவிரதம் இன்று ஆரம்பம்

# மாட்டுக்களவுகள் அதிகரிப்பு

## தடுப்பு முகாம் நிறுவக் கோரிக்கை

முசலி, ஞாயிறு

முசலி மாவட்டத்திலுள்ள வேப்பங்குளம், கொக்குப்படையான், முள்ளிக்குளம், மறுச்சுக்கட்டி, போன்ற பகுதிகளிலுள்ள மாடுகள், மாட்டு வியாபாரிகளாலும், விஷமிகளாலும் சட்ட விரோதமாகக் கடத்தப்படுவதாக முசலி மக்கள், முசலிக்காரியாதிகாரி திரு வை. சொக்கலிங்கத்திடமும் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. எஸ். கதிர்காமநாதனிடமும் புகார் செய்துள்ளனர். இதுபற்றி அடுத்த மன்னார் மாவட்ட இணைப்புக்கூட்டத்தில் ஆராயப்படவிருப்பதாகத் தெரியவருகிறது

முருங்கன் சிலாவத்துறை ஊடாகக் கடத்தப்படும் இம்மாடுகள் முள்ளிக்குளம் பூக்குளம் வழியாக புத்தளத்துக்குக் கொண்டுபோகப் படுகின்றதென்று வதந்தி அடிபடுகின்றது

இங்கு நடைபெறும் மாட்டுக்களவுகளால் இப்பகுதி மக்கள் இக்காலபோகத்திற்கு உழவுக்குக்கூட மாடுகள் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். இதைத் தடுக்க வில்பற்றுக் காட்டுக்குப் போகும் வழியில் தடுப்புமுகாம் ஒன்று வைக்கப்படவேண்டும் என்று இப்பகுதி மக்கள் அரசாங்க அதிபரைக் கேட்கவிருக்கின்றனர்

## பருத்தித்துறையில் அண்ணா தினம்

உடுப்பிட்டி, ஞாயிறு

பருத்தித்துறை எம். ஜி. ஆர். மன்றத்தினரால் காலஞ் சென்ற தமிழக முதல்வர் அறிஞர் அண்ணாவின் 61-வது பிறந்ததின விழா இம்மாதம் 18-ம் திகதி கொண்டாடப்பட விடுக்கிறது.

பருத்தித்துறை கடற்கரை அண்ணா அரங்கில் நகரசபைத தலைவர் திரு. ந. நடராசா தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம், பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம், வவனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம், ஊர்காவற்றுறை எம். பி. திரு. வ. நவரத்தினம், வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம், மட்டக்களப்பு எம். பி. திரு. செ. இராசதுரை, கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினம், திரு. மு. போ வீரபாகு, திரு வேலும் மயிலும், செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, திருமதி மங்கயர்க்கரசி அமிர்தலிங்கம் ஆகியோர் பேசுவர்.

## திட்டமிட்ட திருட்டுக்கள்

### ஒரு கோஷ்டி கைது

சங்கானை, ஞாயிறு

கடந்த சில நாட்களாக சங்கானை, சண்டிலிப்பாய், பிராம்பற்றை ஆகிய இடங்களில் கடைகள், ப. நோ. கூட்டுறவுச்சங்கங்கள் ஆகியனவற்றை உடைத்துக் கள்வாடிய ... சந்தேகிக்கப் பட்டு ...

## இடமாற்றம் ரத்து

நாவற்குழி, ஞாயிறு

நாவற்குழி மகாவித்தியாலயத்தில் புவியியல் ஆசிரியராகக் கடமையாற்றிய திரு. வ. துரைராஜாவின் இடமாற்றம் ரத்துச்செய்யப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் கனகரத்தினம் மகாவித்தியாலயத்திற்கு இடமாற்றம்செய்யப்பட்ட இவ் ஆசிரியரை இடமாற்ற வேண்டாமென நாவற்குழி மகாவித்தியாலய பழைய மாணவர்சங்கமும் பெற்றோர் ஆசிரியர்சங்கமும் எதிர்ப்புத் தெரிவித்ததைத் தொடர்ந்து ரத்துச்செய்யப்பட்டது.

## சன சமூக நிலையத்தின் அவசியம்

உடுப்பிட்டி, ஞாயிறு

வதிரி தேவரையாளி பிளாஸ் சனசமூக நிலைய 6-வது ஆண்டு நிறைவு விழா கொண்டாடப்பட்டது. திரு. க. சிங்கராசா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பலரும் சனசமூக நிலையங்களின் அவசியம் பற்றிப் பேசினர்.

நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்துக் கொண்டே போகும் இக் காலத்தில், இளைஞர்கள் தவறான பாதைகளில் செல்லாமல் பாதுகாப்பதற்கு சனசமூக நிலையங்கள் அத்தியாவசியம் என்று திரு. சி. மகேந்திரன் என்பவர் பேசுகையில் கூறினார். திருவாளர்கள் ந. வேலழகன், ஆ. தம்பையா, சி. சிவராசா ஆகியோரும் பேசினர்.

## நெசவு நூல் தட்டுப்பாடு

வேலணை, ஞாயிறு

... பகுதியில் ... தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இரு மாதங் ...

## வழக்கறிஞர் மறைவு

உடுப்பிட்டி, ஞாயிறு

பிரபல வழக்கறிஞரும், மரணவிசாரணை அதிகாரியுமான திரு. வி. பி. இராசரத்தினம் நேற்றுமுன்தினம் காலமானார். இவரது மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்குமுகமாகப் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் சென்ற வெள்ளிக்கிழமை காலை மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது

மாவட்ட மாஜிஸ்திரேட் திரு. தர்மலிங்கம் மறைந்த வழக்கறிஞரின் சேவைகளைப் பாராட்டி அவர் மறைவு நீதிமன்றத்திற்குப் பெரும் இழப்பெனக் கூறினார். முடிக்குரிய வழக்கறிஞர் திரு. கே. இரத்தினசிங்கம், வழக்கறிஞர் திரு கே. மயில்வாகனம் ஆகியோரும் அனுதாபம் தெரிவித்துப் பேசினர்

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன

### திங்கள் 15—9—69

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ அன்ட் 61 மீ

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 கிறிஸ்தவ நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7 30 திரைகானம், 8-00 செய்திச் சுருக்கம், 8-03 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன்ட் 49 மீ

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 தொழிலாளர்கேட்டவை, 1-00 திரைகானம், 1-30 செய்திச்சுருக்கம்

344 மீ அன்ட் 61 மீ

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 கல்வி ஒலிபரப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தினவாழ்த்துக்கள், 5-15 நாளைய சந்ததி, 5-45 படத்திலிருந்து.

இரவு 6-15 வயலின், 6-30 கிராம சஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 கர்னாடகஇசை, 7-35 முத்திநெறி, 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-40 கர்னாடக இசை, 10-30 செய்திச் சுருக்கம்,

## நன்றி சொல்கிறார்

மந்திகை

# ஆஸ்பத்திரியிலிருந்த குழந்தையின் நகைகள் திருட்டு

புலோலி, ஞாயிறு

மந்திகை அரசினர் ஆஸ்பத்திரியில் குழந்தைப் பிள்ளை வார்ட்டில் வயிற்றோட்டம் காரணமாக அனுமதிக்கப்பட்டிருந்தகுழந்தையொன்று அணிந்திருந்த தங்கச்சங்கிலியும் மோதிரமும் திருடப்பட்டுவிட்டதாம்.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த 6 வயதுடைய இந்தப் பெண்குழந்தை அணிந்திருந்த தங்க நகைகள் நேற்று முன்தினமிரவு திருட்டுப் போய்விட்டதாக பெற்றோர்கள் ஆஸ்பத்திரி மேலதிகாரிகளுக்கு முறையிட்டதைத் தொடர்ந்து பருத்தித்துறைப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டு தற்போது பொலிஸார்புலன் விசாரணை செய்துவருகின்றனர்.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து இந்த ஆஸ்பத்திரியில் தற்போது சிகிச்சை பெற்றுவரும் நோயாளிகள் மிகவும் அச்சமடைந்துள்ளனர்.

முன்னரும் இந்த ஆஸ்பத்திரியில் திருட்டுக்கள் நடைபெற்றது இங்கு குறிப்பிடத்தக்கது.

## வள்ளுவர் விழா

உடுப்பிட்டி, ஞாயிறு

திருவள்ளுவரின் 2000-ம் ஆண்டு நிறைவு விழா இம்மாதம் 17-ம் திகதி கரவெட்டியில் கொண்டாடப்பட இருக்கின்றது. கரவை வள்ளுவர் மன்றத்தினரால் நடாத்தப்படும் இவ்விழா அத்துளு வாரியத்தணை மைதானத்தில் நடைபெறும்.

## கரவெட்டி குழாய் நீர் திட்டம்

புலோலி, ஞாயிறு

கரவெட்டி பகுதியில் தற்பொழுது குளாய் நீர் திட்ட வேலைகள் துரிதமாக நடந்து வருகிறது. அத்துளுக் குளத்திலிருந்து பெறப்படும் இந்த நல்ல தண்ணீர் குளாய் நீர் வசதித்திட்ட மூலம் தனிப்பட்ட வீடுகளுக்கும் குளாய் நீர் வசதியளிக்கப்படவிருக்கிறது.

அடுத்த வருடத்தில் கரவெட்டியிலுள்ள சகலமக்களுக்கும் குழாய் மூலம் தண்ணீர் பெறும் வசதி கிடைக்கும்.

## மின்சாரம்

புலோலி, ஞாயிறு

துன்னாலை வடக்கு, தெற்கு பகுதிக்கு மின்சார விநியோகம் விஸ்தரிக்கப்பட்டு வருகின்றது.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நடித்த
மேரேலால்

(Strictly for Adults)

ராணி
(யாழ்ப்பாணம்)
[தினசரி 3 காட்சிகள்]

சிவாஜி — ஜெயலலிதா
சௌகார் ஜானகி
நடித்த


# எங்க ஊர் ராஜா

அப்பல்லோ -11

12-9-69 தொடக்கம் அப்பல்லோ-11 டெக்னிக்கலரில் 15 நிமிடங்கள் காண்பிக்கப்படும். விண்வெளி வீரர்கள் பூமியிலிருந்து புறப்படுவதிலிருந்து சந்திரனில் கொடி நாட்டியதுவரை விபரமாகக் காண்பிக்கப்படும்.

Also Showing
APOLLO-11 in color-for 15 minutes,

இன்றுமட்டும்
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா வெலிங்டன் (யாழ்நகர்)
2-30 6-30 -930
திரைகளில்

ரங்கராவ் ★ அஞ்சலிதேவி
பாலையா ★ பேபி ரோஜாரமணி
மற்றும் பலர் நடித்த
[ஏ. வி. எம். அளிக்கும்

# பக்த பிரகலாதா

நாளை முதல்
கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்நகர்)
ஆகிய திரைகளில்
ரி. ஆர். ராமண்ணாவின் டைரக்ஷனில் உருவாகி
ரவிச்சந்திரன் ★ ராஜஸ்ரீ
நாகேஷ் ★ அசோகன் ★ ஸ்ரீரஞ்சனி
வசந்தா ★ மனோகர்
நடித்த
ஜரிஸ் மூவிஸாரின்

# நீயும் நானும்

மாகவும் அனுஷ்டிக்கப் பட்டது.

## உண்ணாவிரதம் இன்று ஆரம்பம்

கோப்பாய், திங்கள்

அகில இலங்கை வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் உண்ணாவிரதம் ஏற்கனவே செய்யப்பட்ட தீர்மானத்தின்படி இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

கோப்பாய் எம். பி. திரு. கதிரவேலுப்பிள்ளையின் காரியாலயத்தின் முன் பட்டதாரிகள் சங்கத் தலைவர் திரு. கே. சதானந்தனால் உண்ணாவிரதம் சாகும்வரை அனுஷ்டிக்கப்படும் என்றும் அவரைத் தொடர்ந்து மற்றைய வேலையற்ற பட்டதாரிகளும் உண்ணாவிரதத்தில் கலந்துகொள்வார்கள் என்றும் கூறப்படுகிறது

## தீர்த்தோற்சவம்

உடுப்பிட்டி, திங்கள்

அல்வாய் சாமணந்தறை ஆலடி விநாயகர் ஆலய ரதோற்சவ உற்சவம் நேற்று நடைபெற்றது. இன்று தீர்த்தோற்சவம் நடைபெறும்.

அல்வாய் சாமணந்தறைப் பிள்ளையார் கோவில் வருடாந்த அன்னதானம் இம் மாதம் 18-ம் திகதி நடைபெறும்.

கடந்த சில நாட்களாக சங்கானை, சண்டிலிப்பாய், பிராம்பற்றை ஆகிய இடங்களில் கடைகள், ப. நோ. கூட்டுறவுச்சங்கங்கள் ஆகியனவற்றை உடைத்துக் களவாடிய... சந்தேகிக்கப்பட்டு பொலிஸாரால்தேடப்பட்டுவந்த சந்தேகநபர்கள் கொண்ட கோஷ்டியொன்றைச் சங்கானைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். இக்கோஷ்டியில் சங்கானை, சண்டிலிப்பாய் போன்ற இடங்களிலுள்ளவர்களுடன் தென்னிலங்கையைச் சேர்ந்த நபர் ஒருவரும் அகப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

பொலிஸ் சார்ஜண்ட் திரு. லந்திரா நடத்திய விசாரணையில் சண்டிலிப்பாயைச் சோந்த செல்வத்துரை சிவஞானம் என்பவரே இக்கோஷ்டிக்குத் தலைமைதாங்கியவர்எனவும் நடைபெற்ற களவுகள்யாவும் நன்குதிட்டமிட்டே நடாத்தப்பட்டதெனவும் தெரியவந்துள்ளது.

சிவஞானம் உட்பட நாகமணி நாகராசா, டக்ளஸ் பெரேரா ஆகிய மூவரும் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர். டக்ளஸ் பெரேரா நீதிபதி முன்னிலையில் குற்றத்தை ஒப்புக்கொள்ளவே ஆகஸ்ட் மாதம் 1-ம் திகதி தீர்ப்பு வழங்குவதெனவும் ஏனைய இருவரும் ஆகஸ்ட் மாதம் 6-ம் திகதிவரை றிமாண்டில் இருக்கவும் நீதிபதி உத்தரவிட்டார்.

73-வது தினம்
ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்

சுந்தரராஜன், மனோகர், ராமதாஸ், தங்கவேலு, பத்மினி, பேபி ராணி
நடித்த

# குழந்தைக்காக

குழந்தைக்காக நீங்கள் வாங்கும் அரை டிக்கட்டுகளை கவனமாக வைத்திருங்கள். பலபரிசுகள் காத்திருக்கின்றன உங்கள் குழந்தைக்காக!

# யாழ் - வின்ஸர்

தினசரி — 4 காட்சிகள்
★ எம். ஜி. ஆர். - ★ ஜெயலலிதா
நம்பியார், நாகேஷ், ஷீலாதேவி, அசோகன்
நடிக்கும்

# புதியபூமி

## நெசவு நூல் தட்டுப்பாடு

வேலணை, ஞாயிறு

யாழ்ப்பாணப் பகுதியில் நெசவுநூல் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இரு மாதங்களுக்கு மேலாக வேஷ்டி சால்வைக்குரிய சலைவ நூல் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் இப்பகுதி நெசவுநிலையங்களில் வேஷ்டி சால்வை உற்பத்தி வெகுவாகக் குறைந்துள்ளது.

நெசவுக்கான நூல் விநியோகிக்கும் சமாசத்தில் சலவைநூல் தட்டுப்பாடாகவும் ஏனைய நம்பர் நூல் இருப்புக்குறைந்தும் இருப்பதால், வேற்படி சமாச மூலம் நூல்பெறுபவர்கள் தேவைக்குத்தக்க நூல் பெறஇயலாதிருப்பதால் கஷ்டமுறுகின்றனர்.

## இளைஞர் சங்கத்தின் கடமை

பத்தேகம, ஞாயிறு

'இளைஞர் சங்கங்களும், கிராம சமூகசேவைகள் நிறுவனங்களும் கிராமங்களின் அபிவிருத்தியில் கூடிய கவனம் செலுத்தலாம். இந்த நிறுவனங்களினால்தான் கிராமங்கள் வளர்ச்சியடைய முடியும்'

தமிநல் பிரகதசீலி தருண சங்கத் தலைவர் திரு. டி எல் பியசேன இச்சங்க ஆரம்ப விழாவில் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்

அவர் மேலும் பேசுகையில், இந்நாட்டின் வருங்காலம் இளைஞர்களின் கையிலேயே உள்ளது. நாட்டின் அபிவிருத்தியில் அவர்கள் முக்கிய பங்கு எடுக்கவேண்டும். இச்சங்கங்கள் மத்தியில் ஒற்றுமையும் நல்லெண்ணமும் நிலவவேண்டுமெனக் கூறினார்

## சாட்டி மக்கள் குறை

வேலணை, ஞாயிறு

வேலணையிலுள்ள சாட்டி, செட்டிபுலம் பகுதி மக்கள் பிரயாணம் செய்யும் பொருட்டு ஒரு மைலுக்குக் கூடுதலான தூரம் நடந்து வந்து பஸ் ஏறவேண்டியிருப்பதுபற்றி குறிப்பிட்டு இக்கஷ்டத்தைப் போக்கச் செட்டிபுலம்வரை பஸ் சேவையை நடத்தக் கோரி இப்பகுதி மக்களால் இ. போ. ச முகாமையாளருக்கு மகஜர் அனுப்பப்பட்டுள்ளது

இம்மகஜரின் பிரதிகள் தீவுப்பகுதி ஆட்சி மன்ற உறுப்பினருக்கும் வேலணை கி. ச. தலைவருக்கும் அனுப்பப்பட்டுள்ளன

இசை, 10-30 செய்திச் சுருக்கம்,

## நன்றி சொல்கிறார்

### யாழ். உதவி மேயர்

யாழ்ப்பாணம், திங்கள்

''நல்லூர்க் கந்தசுவாமி கோவில் உற்சவ காலத்தில் யாழ். மாநகர சபையினர் அடியார்களின் சுகாதார, மின்சாரத்துறையில் பெரும் சேவை செய்திருப்பதை பொதுமக்கள் எவரும் மறந்திருக்கமாட்டார்கள்.''

இவ்வாறு யாழ். மாநகர சபை உதவி மேயர் திரு. ஆ. துரைராஜசிங்கம் பூங்காவன உற்சவதினத்தன்று ஆலய வீதியில் அமைக்கப்பட்டிருந்த மாநகரசபை அலுவலகத்திலிருந்து பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. துரைராஜசிங்கம் மேலும் கூறியதாவது: கடந்த வருடங்களை விட இம்முறை இலவசமாக அன்னதானம், தாகசாந்தி வழங்கிய பந்தல்களுக்கு மின்சார வசதிசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. வழக்கத்தைவிட இத்தடவை பொலிசாரின் திறமையான பாதுகாப்பு முறைகளால் எந்தவித குற்றச்செயல்களும் நடைபெறவில்லை. பொலிஸாரின் சேவை பாராட்டுக்குரியது.


கந்தசுவாமி கோவில் திருவிழா ஏற்பாடுகளை பொது மராமத்து வேலைப்பகுதி, மின்சார, சுகாதாரப்பகுதிகளின் ஊழியர்கள், உத்தியோகத்தர்களின்உதவியுடன் மேயர் இம்முறை திறம்படச் செய்துள்ளார். இதனால் மேயர் மக்களின் பாராட்டுதலுக்குரியவராக விளங்குகின்றார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## இரு விழாக்கள்

அளவெட்டி, ஞாயிறு

காந்தி நூற்றாண்டுவிழாவும், பாரதிவிழாவும் குரும்பசிட்டி சன்மார்க்கசபையில் கொண்டாடப்பட்டது. இரசிகமணி கனக செந்திநாதன் தலைமையில் நிகழ்ந்த இவ்விழாவில் திருமலை நில அளவைப் பகுதி தலைமை லிகிதர் திரு. வே. சிவஞானம் காந்தி மீதானப் பாடல்களை பக்கவாத்தியங்களுடன் பாடினார்.

தியாகி கோ. கோ. இராசகோபால், காரை சுந்தரம்பிள்ளை ஆகியோர் உரையாற்றினர்.



சளிசுரம், காய்ச்சல் அல்லது தடிமலால் அவஸ்தைப்பட வேண்டியதேயில்லை. டிஸ்பிரின் உங்களுக்கு துரிதமான, உறுதியான, பாதுகாப்பான நிவாரணமளிக்கிறது.

டிஸ்பிரின், சளிசுரம், தடிமலால் ஏற்படும் அசௌகரியத்திலிருந்தும் • நோவு, வலிகளிலிருந்தும் துரித நிவாரணமளிக்கிறது. அத்துடன், டிஸ்பிரின் உங்கள் தேக உஷ்ணம் தணிந்து இயல்பான நிலைக்கு வர உதவுகிறது.

துரித நிவாரணம்

டிஸ்பிரின் கரையக் கூடியதாகையால், உடனடியாகச் செயலாற்றத் தொடங்குகிறது. இரத்தோட்டத்தில் விரைவில் செறிந்து மிகத் துரிதமான, மிக உறுதியான நிவாரணத்தை அளிக்கிறது.

பாவிப்பதற்கு மிகப் பாதுகாப்பானது

டிஸ்பிரின் பல நாடுகளிற் பாவித்துப் பரீட்சிக்கப்பட்டு ஒழுங்கான பாவனைக்குப் பாதுகாப்பானது என்று காணப்பட்டுள்ளது. சாதாரண மாத்திரைகளைப் போலன்றி, டிஸ்பிரின் கரையக் கூடியதாகையால் அது உங்கள் வயிற்றில் அசௌகரியத்தையும், பாதக விளைவுகளையும் உண்டு பண்ணும் அமிலத்துகள்களை விடுவதில்லை.

டாக்டர்கள் சிபாரிசு செய்வது

உலகெங்குமுள்ள டாக்டர்கள் டிஸ்பிரினை நம்பிக்கையுடன் சிபாரிசு செய்கிறார்கள். ஏனெனில் டிஸ்பிரின் மேலும் துரிதமான, பாதுகாப்பான, உறுதியான நிவாரணத்தையளிக்கிறது என்பதை அவர்கள் அறிவார்கள்.

2 மாத்திரைகளை நீரில் கரையவிட்டு அல்லது முழுமையாக ஏதாவது பானத்துடன் உட்கொள்ளுங்கள்.




குழந்தைகளுக்கு பெட்டியிலுள்ள அளவுப் பிரமாணங்களைப் பாருங்கள்.

சளிசுரம், காய்ச்சல், தடிமலிலிருந்து நிகரற்ற அதி துரித நிவாரணம் பெற எப்போதும் டிஸ்பிரின் பாவியுங்கள்.

ஒரு றெக்கிட் அண்ட் கோல்மன் உற்பத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க கைதிகளை வடவியட்னும் கொடுமைப்படுத்துகிறதாம்

பாரிஸ், செப். 14

**வடவியட்னும்பிடித்து வைத்துள்ள அமெரிக்க கைதிகளைக் கொடுமைப் படுத்துவதாக அமெரிக்கா குற்றஞ்சாட்டியிருக்கிறது.**

வியட்னும் சண்டையின் போது வடவியட்னும் பிடித்து வைத்துள்ள அமெரிக்க கைதிகள் கொடுமைப்படுத்தப்படுவதாகவும், மனிதாபிமானமற்ற முறையில் நடத்தப்படுவதாகவும் வியட்னும் அமைதிக்காக பாரிஸில் நடைபெறும் பேச்சுவார்த்தைகளின்போது அமெரிக்க தலைமைப் பிரதிநிதி திரு. ஹென்றி கெபொட்லாஜ் கூறினுர்.

இந்தக்குற்றச்சாட்டுக்களை வடவியட்னும் பிரதிநிதிகள் மறுத்தார்கள். அமெரிக்க கைதிகளை ஐ. நா. தீர்மானங்களுக்கமைய நடத்தவேண்டுமென்றுதிரு. கெபொட்லாஜ் கேட்டுக்கொண்டதற்கு வடவியட்னும் பிரதிநிதிகள் பதிலளிக்கையில், அந்த முறையில் நடத்தப்படக்கூடியவர்கள் அல்ல இந்தக் கைதிகள் என்றும், ஆனுல் கொடுமைப்படுத்தப்படுகிருர்கள் என்பது தவறு என்றும் குறிப்பிட்டனர். அண்மையில் வடவியட்னுமினுல் விடுதலைசெய்யப்பட்ட சில அமெரிக்க கைதிகள் தாங்கள் நல்ல முறையில் நடத்தப்பட்டதாகக் கூறியிருந்தார்கள்.

டாக்டர்ஹோசிமின் மறைவுககுப்பின் வியட்னுமில் அமைதிநிலவும் என்றும் பாரிஸ் பேச்சுக்களிலும் புது மாற்றங்கள் ஏற்படலாம் என்றும் முன்னர் எதிர்பார்க்கப்பட்டது. ஆனுல் இதுவரைக்கும் போர்நிறுத்த நிலைமையிலோ அன்றி அமைதிப்பேச்சுகளின்போக்கிலோ முன்னேற்றமான மாற்றம் எதுவும் ஏற்பட்டிருப்பதாகத்தெரியவில்லை. அனேசமாக போர் நிலையில் முன்னரைவிட இனிமேல்நிலைமை மேலும் மோசமாகலாம் என்று சில ராஜதந்திர வட்டாரங்கள் கருத்துவெளியிட்டுள்ளன.

## இந்திரா தமிழ்நாடு வருகிருர்

சென்னை, செப். 14

இந்தியப்பிரதமர் திருமதி இந்திரா காந்தி அடுத்த மாதம் 4-ம் திகதி முதல் 5-ம் திகதிவரையில் தமிழ்நாட்டில் இரு நாட்கள் சுற்றுப் பிரயாணம் செய்வார்.

இத்தகவலை தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. சி. சுப்பிரமணியம் அறிவித்திருக்கிருர்

திருமதி காந்தி, சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களுக்கும் செல்வார்.

## கோண்டாவில் ஆலய சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், திங்கள்

கோண்டாவில் அற்புத நர்த்தன விநாயகர் 1008 சங்காபிஷேகம் இன்று காலை 8 மணிக்கு நயினை பிரமஸ்ரீ ச. மகேஸ்வரக் குருக்களால் செய்யப்படும். பகல் 12 மணிக்கு அன்னதானமும் மாலை 6 மணிக்கு விநாயகர் சகஸ்ரநாம அர்ச்சனையும் இரவு சென்னை பி. ஓ. எஸ். இராஜசேகரன் குழுவினரின் திருமுறைப் பண்ணிசையும் நடைபெறும்.

## பிராம்பத்தைக்கு உப தபால்நிலையம்

சுழிபுரம், ஞாயிறு

பண்டத்தரிப்பு தபாற்கந்தோரின் அதிகார எல்லைக்குட்பட்டிருந்த பிராம்பத்தைப் பகுதிக்கு புதிய உப தபாற்கந்தோர் வெகுவிரைவில் கிடைக்கவிருக்கிறது.

## மாலைதீவுக்கு பயணம்

சுழிபுரம், ஞாயிறு

பண்ணுகம் தெற்கைச் சேர்ந்த திரு. சி. சிவசுப்பிரமணியம்மாலைதீவுக்கு பயணமானுர். இவர் மாலைதீவிலுள்ள ஒரு கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றுவதற்கே சென்றுள்ளார். ஒப்பந்த அடிப்படையில் சென்றுள்ள இவர் நான்கு ஆண்டுகள் அங்கு கடமையாற்றுவார்.

பூநகரி—சங்குப்பிட்டி

## வள்ளச்சேவைச்சீர்கேட்டால் அதிகாரிகள் பட்டபாடு

யாழ்ப்பாணம், திங்கள்

வள்ளச்சேவை சீர்கேட்டால் பொலிஸாரும், மரணவிசாரணை அதிகாரியும், சட்ட வைத்திய அதிகாரி ஒருவரும் கடற்கரையில் சுமார் 4 மணி நேரம் காத்து நின்ற சம்பவம் நேற்று முன்தினம் பூநகரி-சங்குப்பிட்டி பாலத்தில் நடைபெற்றது.

பூநகரியில் மரணவிசாரணை ஒன்றை நடாத்தச் சென்ற உயர் அதிகாரிகளுக்கும், பொலிஸ் கோஷ்டியினருக்குமே இந்தக் கதியேற்பட்டதாம்.

ஒருமணி நேரத்தில் மரண விசாரணை நடந்து முடிந்த போதும் சங்குப்பிட்டிப் பாதையில் நின்ற 'பாதை' பழுதடைந்ததால், உடனடியாகச் சேவையிலீடுபட வள்ளம் எதுவும் இல்லாததாலேயே இவ்வாறு 4 மணி நேரம் அடுத்த வள்ளத்திற்காகத் தாம் காத்து நிற்க நேரிட்டதாக மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் தெரிவித்தார்

இதுபற்றி அவர் மேலும் குறிப்பிடுகையில், இந்தக் கேவலமான வள்ளச்சேவையால் அவசரமான பல தேவைகள் பாதிக்கப்படுகின்றன என்றும், இதுசம்பந்தமாகக் குறிப்பிட்ட இலாகா அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் சொன்னுர்.

(கா. நி)

## தமிழைப் புறக்கணித்துக்கொண்டு சகோதரத்துவமா?

### கோப்பாய் எம்.பி.கேட்கிருர்

யாழ்ப்பாணம், திங்கள்

சிங்கள தமிழ் சகோதரத்துவம் பற்றி சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் மட்டுமே அச்சடிக்கப்பட்டு அனுப்பப்பட்ட துண்டுப் பிரசுரம் ஒன்றை அதன் வெளியீட்டாளருக்கே திருப்பி அனுப்பி வைத்தார் கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை.

இதற்குக் காரணம் சிங்கள தமிழ் சகோதரத்துவம் பற்றி வெளியிடப்பட்டுள்ள துண்டுப் பிரசுரம் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் மட்டுமே அச்சடிக்கப்பட்டு தமிழ் புறக்கணிக்கப்பட்டது தானும்.

இந்தத் துண்டுப் பிரசுரத்தை ஐக்கிய தேசிய கட்சி பிரமுகரான பந்துல ஸ்ரீ குணவர்த்தன வெளியிட்டிருக்கிருர்.

சிங்கள தமிழ் சகோதரத்துவம் பற்றி சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் மட்டும் வெளியிட்டு தமிழைப் புறக்கணிப்பதால் சிங்கள தமிழ் சகோதரத்துவம் ஏற்பட்டு விடாது என்று திரு. கதிரவேலுப்பிள்ளை துண்டுப் பிரசுரத்துடன் இணைத்து அனுப்பியுள்ள கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

(கா. நி)

# டூப்செக்மீது பிராக் வானெலி மீண்டும் வசைபுராணம்

பிராக், செப். 14

பிராக் வானெலி மீண்டும் திரு. டூப்செக்கையும் அவரது சகபாடிகளையும் கண்டிக்க ஆரம்பித்துள்ளது.

இவர்கள் பொதுவாழ்விலிருந்து விலகிக்கொள்ள வேண்டும் என்று அண்மையில் பிராக் வானெலி வற்புறுத்தத் தொடங்கியது.

திரு. டூப்செக், கம்யூனிஸ்ட் கட்சிக்கும், நாட்டு மக்களுக்கும் தெரியாமல் விரும்பத்தகாத செயல்களில் ஈடுபட்டிருந்தது இப்பொழுது தெரிய வந்திருப்பதாக பிராக் வானெலி கூறியிருக்கிறது

செக்கோஸ்லவாக்கியா அரசியல் போக்கில் தாராளக் கொள்கையைக் கடைப்பிடிப்பதற்கு திரு. டூப்செக்கும் மற்றவர்களும் முன்னேடிகளாய் இருந்துவந்தனர். அதன் காரணமாகச் செக்கோஸ்லவாக்கியாவுக்குள் வார்ஸோ ஒப்பந்த நாடுகளைச் சேர்ந்த படைகள் ஆக்கிரமிப்பு மேற்கொண்டன. அதன்பிறகு ஆட்சிபீடத்திலும் செக். கம்யூனிஸ்ட் கட்சித் தலைமைப் பீடத்திலும் பெரும் மாற்றங்கள் செய்யப்பட்டன. கட்சியின் முதல் காரியதரிசியாக இருந்த திரு. டூப்செக் சட்டப்பேரவையின் தலைவராக்கப்பட்டார். கட்சியின் முதல் காரியதரிசிப் பதவிக்கு ரஷ்யச் சார்பாளரான டாக்டர் ஹூசாக் தெரிவுசெய்யப்பட்டார்

இப்பொழுது திரு. டூப்செக்கை பொதுவாழ்விலிருந்தே ஒதுக்கிவிடுவதற்கு முயற்சிகள் எடுக்கப்படுகின்றன

# ஈரான் வீரர்கள் 30 பேரை ஈராக் ராணுவம் கொன்றது

## ஊடுருவல் செய்தார்களாம்

பாக்தாத், செப். 14

ஈராக் எல்லைக்குள் ஊடுருவல்செய்த ஈரான் சிப்பாய்கள் 30 பேரைக் கொன்றுவிட்டதாக ஈராக் அறிவித்திருக்கிறது. 14 ஈரானியரைக் கைதுசெய்திருப்பதாக தெரிவிக்கிறது. ஈராக் எல்லையில் ஊடுருவல் செய்தவர்களே கொல்லப்பட்டவர்கள் என பாக்தாத் றேடியோ அறிவித்தது. கைதுசெய்யப்பட்டவர்கள் தாங்கள் ஈரானிய ...

கப்பல் போக்குவரத்துச் சம்பந்தமாக இரு நாடுகளுக்குமிடையில் சமீபகாலமாகவே தகராறு இருந்து வருகின்றது. இதன் காரணமாகவே எல்லைப் பிரதேசத்தில் ஏற்பட்ட சண்டையில் ...

# தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி பிளவுபடுமா?

சென்னை, செப். 14

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் காமராஜருக்கும் திரு. சுப்பிரமணியத்துக்குமிடையில் ஏற்பட்டுள்ள கருத்துவேற்றுமைகள் கட்சியை இரண்டாகப் பிளவுபடக்கூடிய அபாயத்தை நோக்கிப் போய்க்கொண்டிருப்பதாகக் கருதப்படுகின்றது. இந்தக் கருத்துவேற்றுமைகள் உடனடியாகக் களையப்படாவிட்டால் நிலைமை மோசமாகிவிடக்கூடும் என்று கூறப்படுகின்றது.

தமிழ்நாடு காங்கிரஸ் பேரவைக் கூட்டம் அக்டோபரில் நடைபெறும் என்றும், ஆனுல் திகதி எதுவும் நியமிக்கப்படவில்லை என்றும் த. நா. கா. க. தலைவர் திரு. சுப்பிரமணியம் இங்கு கூறினுர்.

பிரதேச காங்கிரஸின் பேரவைக் கூட்டத்தை விரைவில் நடத்துமாறு த. நா. கா. க. தலைவரை நிர்ப்பந்தப்படுத்தும் ... சென்னை ... நடத்துமாறு பிரதேச காங்கிரஸ் உறுப்பினர்கள் 40 பேர் கோரினுல் பேரவையைக் கூட்டியாக வேண்டும் என்று தகவல் கிடைத்திருக்கிறது

ராஷ்டிரபதி தேர்தலைத் தொடர்ந்து நடந்த சம்பவங்கள் சம்பந்தமாக திரு. சுப்பிரமணியம் மேற்கொண்ட நிலையை தென் சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டியும் கண்டித்திருக்கிறது ஏற்கனவே வட சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டி திரு. சுப்பிரமணியம்நிலையை செப்டம்பர் 2 ல் தீர்மானம் ஒன்றின் மூலம் கண்டித்திருப்பது நினைவுறத்தக்கது. காங்கிரஸ் ஊழியர்கள் நம்பிக்கையை திரு. சுப்பிரமணியம் இழந்துவிட்டார் என்று கருதுவதால் அவர் த. நா. கா. க. தலைமைப் பதவியை துறக்கவேண்டும் என்று கோரி தீர்மானமொன்றை தென் சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டி நிறைவேற்றி ... கூட்டத்தில் திரு. சுப்பிரமணியத்திற்கு எதிராகக் கோஷங்கள் கிளம்பின.

த. நா. கா. க. வில் பிளவு ஏற்படுவதைத் தவிர்க்க சிலர் ஆவலாக உள்ளனர். திரு. காமராஜ், திரு. சுப்பிரமணியம், திரு. பக்தவத்சலம் ஆகிய மூவரையும் சந்திக்குமாறு செய்ய அவர்கள் முயற்சித்து வருகின்றனர். சற்றுபோதுள்ள சர்ச்சையைப் பற்றி ஒளிவுமறைவு இன்றி மூவரும் விவாதித்து தப்பபிப்பிராயங்களைப் போக்கிக்கொள்ள முடியும் என்பது அவர்கள் எண்ணம்.

காங்கிரஸ் அரசியல் வட்டாரங்களில் மேலெழுந்தவாரியாக அமைதி நிலவிய போதிலும் உள்ளூரப் புகைந்துகொண்டிருக்கிறது. இதன்விளைவாக பகிரங்க மோதல் கூடியவிரைவில் ஏற்படலாமென்று தோன்றுகிறது.

## பௌர்ணமி கலைவிழா

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாண மாநகர சபையினர் வரும்25-ம்திகதி அளிக்கும் பௌர்ணமி தின ...

தந்தை மரண எதிரொலி

## சரணடைந்த மகன் றிமாண்டில் வைக்கப்பட்டார்

யாழ்ப்பாணம், திங்கள்

தந்தையின் மரணம் சம்பந்தமாகப் பொலிசாரால் தேடப்பட்டு வந்த மகன் ஒருவர் யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் நீதிமன்றத்தில் சரணடைந்தார்.

இம்மாதம் 30-ந் திகதி யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் மரணமான கரையூரைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை என்ற 63 வயது வயோதிபரின் மரணம் சம்பந்தமாகவே இவரது மகனை டோனுஸ் என்பவர் பொலிசாரால் தேடப்பட்டு வந்தார்.

இம்மாதம் 12-ந் திகதி யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் நீதிமன்றத்தில் சரணடைந்த டோனுஸ் மாஜிஸ்டிரேட்டின் உத்தரவின் பேரில் றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார்.

(கா. நி.)



## நோயால் விவசாயிகள் ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாக்தாத், செப். 14

ஈராக் எல்லைக்குள் ஊடுருவல்செய்த ஈரான் சிப்பாய்கள் 30 பேரைக் கொன்றுவிட்டதாக ஈராக் அறிவித்திருக்கிறது. 14 ஈரானியரைக் கைதுசெய்திருப்பதாகவும் ஈராக் அறிவித்துள்ளது.

ஈரானுக்கும் ஈராக்கிற்குமிடையே உள்ள ஆற்றில் கப்பல் போக்குவரத்துச் சம்பந்தமாக இரு நாடுகளுக்குமிடையில் சமீபகாலமாகவே தகராறு இருந்து வருகின்றது. இதன் காரணமாகவே எல்லைப் பிரதேசத்தில் ஏற்பட்ட சண்டையில் ஈராக் 30 ஈரான் ராணுவத்தினரைக் கொன்றதாகவும், 14 பேரைக் கைது செய்துள்ளதாகவும் தெரிகிறது. ஈராக் எல்லையில் ஊடுருவல் செய்தவர்களே கொல்லப்பட்டவர்கள் என பாக்தாத் றேடியோ அறிவித்தது. கைதுசெய்யப்பட்டவர்கள் தாங்கள் ஈரானிய ராணுவத்தில் கடமையாற்றுபவர்கள் என்று ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

பிரதேச காங்கிரஸின் பேரவைக் கூட்டத்தை விரைவில் நடத்துமாறு த. நா. கா. க. தலைவரை நிர்ப்பந்தப்படுத்தும் பொருட்டு கையெழுத்து சேகரிக்கும் இயக்கத்தை தென் சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டி ஆரம்பித்துள்ளது.

பேரவைக் கூட்டத்...

...கோரி தீர்மானமொன்றை தென் சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டி நிறைவேற்றியது.

பேரவைக் கூட்டத்தை விரைவில் கூட்டும் முயற்சியில் செங்கற்பட்டு ஜில்லா காங்கிரஸ் கமிட்டி ஆதரவையும் பெற தென்சென்னை ஜி கா. க. முற்பட்டிருக்கிறது.

ராஷ்டிரபதி தேர்தலுக்கு கட்சி அபேட்சகராக திரு. சஞ்சீவரெட்டியின் பெயரை பிரேரித்த பின்னர் அவரை ஆதரிக்கத்தவறியதன்மூலம் பிரதமமந்திரி இந்திரா காந்தி தவறிழைத்துவிட்டார் என்பது த. நா. கா. க.வில் பெரும்பாலான அங்கத்தவர்களின் நிலை. இப்பிரச்னையில் திரு. காமராஜ் யோசனைப்படி நடக்க அவர்கள் தயாராக உள்ளனர். த நா கா கவில் சிலர் திரு சுப்பிரமணியம் நிலையை ஆதரிக்கின்றனர், பிரதம மந்திரி தரப்பில் தாம் இருப்பதாகக் கருதும் ரீதியில் சமீபத்தில் சில அறிக்கைகளை இப்பிரச்னை சம்பந்தமாக அவர் விடுத்திருக்கிறார்.

தற்போதுள்ள போக்கு தடுக்கப்படாமல் நீடிக்குமானால் காங்கிரஸ் கட்சியில் பிளவு ஏற்பட வழிவகுக்கலாம் என்று அரசியல்நோக்கர்கள் கருதுகின்றனர். திரு. காமராஜ் டில்லியிலிருந்து திரும்பியபின்னர் அவரும் திரு சுப்பிரமணியமும் இன்னமும் நேரடியாகச் சந்தித்து பேசாததை அவர்கள் எடுத்துக் காட்டுகின்றனர்.

திரு மொரார்ஜிதேசாய் புதனன்று பேசிய பொதுக் கூட்டத்திற்கு திரு. சுப்பிரமணியம் வராததுபற்றியும் கடுமையாகப் பேசப்படு...

## பௌர்ணமி கலைவிழா

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாண மாநகர சபையினர் வரும்25-ம்திகதி அளிக்கும் பௌர்ணமி தின கலைவிழாவில் பின்வரும் நாடகங்கள் நடைபெறவிருக்கின்றன.

கோப்பாய் அரசினர் மகளிர் ஆசிரியர் கலாசாலை அளிக்கும் ''தேரோட்டி மகன்'' (இலக்கிய நாடகம்).

அரியாலை சனசமூக நிலைய மாதர் பகுதியினர் வழங்கும் ''கற்புக் கனல்''. (முற்றிலும் பெண்கள் நடிக்கும் இலக்கிய நாடகம்).

வாகீசர் சனசமூக நிலையம் (அல்லைப்பிட்டி)மேடையேற்றும் ''பெண்ணுகமாறினால்'' (மனோதத்துவ நகைச்சுவை நாடகம்)

யாழ் திறந்தவெளி அரங்கில் மாலை 6-30க்கு இவ் விழா நடைபெறும்.

## கொல்லங்கலட்டி ஆலய சங்காபிஷேகம்

கொல்லங்கலட்டி, திங்கள்

கொல்லங்கலட்டி விரகத்திப் பிள்ளையார் கோவில் மகாசங்காபிஷேகம் இன்று நடைபெறுகிறது.

இரவு 7 மணிக்கு 'சித்திபுத்தி' திருமணம் என்னும் விஷயம் பற்றி பண்டிதை சைவப்புலவர், செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி சொற்பொழிவு நிகழ்த்துவார். பண்டிதர் வே. சங்கரப்பிள்ளை 'நம்பியாண்டார் நம்பி' சரித்திரத்தை பக்கவாத்திய சகிதம் கதாப் பிரசங்கமாக நிகழ்த்துவார்.



## பட்டம் பெற்றுத் திரும்பினர்

யாழ்ப்பாணம், திங்கள்

கோப்பாயைச் சேர்ந்த செல்வி கமலாதேவி பாலசிங்கம் சென்னை அரசாங்க மத்திய கர்நாடக இசைக் கல்லூரியில் பயின்று 'சங்கீத வித்துவான்' பட்டம் பெற்றுக் திரும்பியுள்ளார்.

இவர் கோப்பாய் இரசிக கலாமன்றத்தில் பயின்று வட இலங்கை சங்கீத சபைப்பச்ட்சைகளில்சித்தியடைந்துள்ளார். இவர் திரு. முசுறி சுப்பிரமணிய ஐயரின் பிரதம சிஷ்யையாயன குமாரி எஸ். எஸ், பத்மஜாவிடம் பிரத்தியேகமாக ஒருவருட இசைபயின்றுள்ளார்.

—

வின் பேரில் நிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார். (கா. நி.)

......

## நோயால் விவசாயிகள் கவலை

புலோலி, ஞாயிறு

புலோலி, துன்னாலை, கரவெட்டி, நிக்கம் ஆகிய பகுதிகளில் விளையும் மரக்கறி வகைகளுக்கு இப்பொழுது ஒருவித நோய் பீடித்துள்ளதாகத் தெரிய வருகிறது.

இந்த நோயின் காரணமாக மரக்கறி உற்பத்தியாளர்கள் பெரும் கவலை அடைந்துள்ளனர். எந்த விதமான கிருமிநாசினியும் இந்த நோயைக் கட்டுப்படுத்துவதாகத் தெரியவில்லையென்றும் இப்பகுதி விவசாயிகள் கூறுகின்றனர்.

—

## நாவாந்துறை தபாற்கந்தோர்

யாழ்ப்பாணம், திங்கள்

நாவாந்துறை புதிய உப தபாற் கந்தோர் இம் மாதம் 24-ம் திகதி யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜி. ஜி பொன்னம்பலத்தால் திறந்து வைக்கப்படவிருக்கிறது. நாவாந்துறை உப தபாற்கந்தோர் அதிபராக திரு. டானியல் அன்ரனி நியமிக்கப்பட்டுள்ளார்.

—

# மகாராஷ்டிரம், குஜராத்போன்று தமிழ் நாட்டில் தொழில் வளர்ச்சி

## மந்திரி மாதவன் திட்டம்

சென்னை, செப் 14

மகாராஷ்டிரத்தையும், குஜராத்தையும் பின்பற்றித் தமிழ்நாட்டில் தொழில்களை துரிதமாக அமுல் நடத்துவதற்கான ஒரு திட்டத்தை தமிழ்நாடு தொழில் இயல் அமைச்சர் திரு. மாதவன் தயாரித்திருப்பதாகத் தெரிகின்றது.

அந்த மாநிலங்களுக்கு சென்று திரும்பிய திரு. மாதவன் அங்கு தொழில் வளர்ச்சியை நேரில்பார்த்துவிட்டு தமிழ்நாட்டின் தொழில்களில் துரித வளர்ச்சிக்கான சில யோசனைகளுடன் திரும்பியிருககிறார்.

திரு. மாதவன் நிருபர்களிடம் கூறியதாவது:

மகாராஷ்டிரத்தின் அரசாங்க தொழில் அபிவிருத்தி கார்ப்பரேஷன் செய்துவரும் அரும்பெரும் பணிகளைக் கண்டு நான் ஆச்சரியமடைந்தேன் குஜராத் மாநிலத்தில் பரவலாகவும் சம நிலையிலும் தொழில்கள் ஏற்படுவதற்கு மாத்திரம் அரசாங்க தொழில் கார்ப்பரேஷன் உதவி புரியவில்லை தொழில்களை ஊக்குவிப்பதற்கும் அது பல ஏற்பாடுகளைச் செய்துள்ளது. அத்துடன் மேலும் பல தொழில்களை ஆரம்பிப்பதற்கு தனியார் தொழில்துறையினருக்கு ஊக்கமும் அளிக்கிறது. சில குறிப்பிட்ட தொழில்களை ஆரம்பிப்பது சாத்தியமா என்பதுபற்றியும் அரசாங்க சார்ப்பரேஷன் அறிக்கையைத் தயாரித்துக் கொடுத்துத்தொழில் துறையினருக்கு வழியும் காட்டுகிறது.

திரு. மாதவன் மேலும் கூறினார்: 'குஜராத்தில் அரசாங்க தொழில் கார்ப்பரேஷனின் சாதனையைக் கண்டு ஆச்சரியமடைந்தேன். ஆகவே அதைப் போன்ற ஒரு அமைப்பைத் தமிழ் நாட்டிலும் ஆரம்பிக்க உத்தேசித்திருக்கிறேன்.

'மகாராஷ்டிரத்திலும் குஜராத்திலும் ரசாயனம், பெட்ரோலியம், மருந்து தொழிற்சாலைகள் மிகவும் வளர்ச்சியடைந்துள்ளதைக் கண்டேன். இந்த அளவுக்கு தமிழ்நாட்டில். இந்தத் தொழில்கள் வளர்ச்சியடையவில்லை. மகாராஷ்டிரத்திலும் மற்ற இடங்களிலும் ரசாயனத் தொழில்களை அபிவிருத்தி செய்வதற்கும் இயக்குவதற்கும் தென் இந்தியர்கள் மிகவும் உதவியாக இருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆகவே நமது மாநிலத்திலும் ரசாயனத் தொழில் வளர்ச்சிக்கு அரசாங்கத்திற்கு ஆலோசனைகளைக் கூற ஒரு ஆலோசகரை நியமிக்க உத்தேசித்திருக்கிறேன். அந்த ஆலோசகர் நமது மாநிலத்தில் ரசாயனத் தொழில்களை ஆரம்பிப்பதற்கான சாத்தியக் கூறுகளைப்பற்றி அறிக்கைகளைத் தயாரிப்பார். இத்தகைய வசதிகளை அளித்தால் நமது தொழில் அதிபர்களும் தாமே அறிக்கை தயாரிக்க வேண்டிய சிரமம் இன்றித் தொழில்களை ஆரம்பிக்க இயலும்.

இலங்கை அகதிகளுக்காக

# 'வந்தராவ்' காட்டில் தேயிலைத் தோட்டம்

## மதியழகன் தகவல்

சென்னை, செப் 14

இலங்கையிலிருந்து திரும்புவோரின் புனர் வாழ்வுக்கான திட்டங்கள் பற்றி தமிழக சட்டமன்றத்தில் கேள்வி நேரத்தின் போது நிதி மந்திரி திரு. மதியழகன் விவரித்தார்.

கோடைக்கானலில் இலங்கை அகதிகளை குடியேற்றி விவசாயம் நடத்த திட்டமேதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்று திரு சித்தன் கேட்ட கேள்விக்கு மந்திரி பதிலளிக்கையில் இலங்கை அகதிகளுக்காக 'வந்தராவ்' காட்டில் தேயிலை தோட்டங்களை ஆரம்பிக்க ஆலோசனை செய்யப்படுவதாக தெரிவித்தார்.

அப் பகுதியில் தேயிலை கோப்பிதோட்டங்களை ஆரம்பிக்க ரெவினியூ இலாகா விரும்புகையில் காட்டிலா காவோர் வாட்டில் மரங்களையே பயிரிட விரும்புவதாகவும் இந்த 'மோதலில்' அரசு தலையிட்டு எது சிறந்தது என்று ஆராய அப்பகுதி மண் மாதிரிகளை கோவை விவசாய கல்லூரிக்கு அனுப்பி இருப்பதாயும் அங்கிருந்து அறிக்கை வந்த பிறகு அரசு முடிவு எடுக்கும் என்றும் கூறினார்.

திரு. ஏ. எம். ராஜாவின் கேள்விக்கு விவசாய அமைச்சர் திருமதி சத்தியவாணி முத்து பதிலளிக்கையில் சென்னையிலும் தூத்துக்குடியிலும் முறையே ரூ. 283 லட்சம், ரூ. 208 லட்சம் செலவில் மீன் பிடித் துறைமுகங்களை ஆரம்பிக்க மத்திய அரசு அனுமதி வழங்கி உள்ளது என்று கூறினார்.

திரு. விநாயகத்தின் கேள்விக்கு விவசாய அமைச்சர் பதிலளிக்கையில் சேலத்தில் மண்வள ஆய்வுக் கூடம் ஏற்படுத்த அரசு ஆலோசித்து வருவதாகக் கூறினார். அந்த ஆய்வு கூடம் சேலம், தர்மபுரி மாவட்டங்களின் விவசாயிகளுக்கு பணி புரியும் என்று மந்திரி குறிப்பிட்டார்.

காவேரி நீர் பிரச்னை:

## மத்திய அரசு தலையிடக் கோரிக்கை

சென்னை, செப். 13

காவேரி ஆற்று நீரைப் பகிர்ந்துகொள்வது சம்பந்தமாக மைசூர் அரசுக்கும், தமிழ்நாடு அரசுக்குமிடையில் ஏற்பட்டுள்ள தகராறில் மத்திய அரசாங்கம் உடனடியாகத் தலையிட்டு ஆவனசெய்ய வேண்டுமென்று தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி கேட்டுக்கொண்டிருக்கிறார்.

மைசூர் அரசு எடுக்கும் ஒருதலைப்பட்சமான நடவடிக்கைகளினால் தமிழ் நாட்டுக்குப் பாதகம் ஏற்படாமல் நீதியை நிலைநாட்ட வேண்டுமென்று திரு. கருணாநிதி மத்திய அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டார். தமிழ்நாடு சட்டசபையில் நேற்று உரை நிகழ்த்துகையில் திரு: கருணாநிதி வேண்டுகோள் விடுத்தார்.

கரவெட்டி

# பௌத்த பாடசாலைக்கு ரூ. 20,000 க்கு தளபாடம்

உடுப்பிட்டி, ஞாயிறு

கரவெட்டி மேற்கு ஸ்ரீநாரத தமிழ் சிங்கள பௌத்த பாடசாலைக்குக் கல்வி இலாகா சுமார் இருபதினாயிரம் ரூபா பெறுமதியான பாடசாலைத் தளபாடங்களை அனுப்பிவைத்துள்ளது.

புதிதாகக் கிடைத்துள்ள இத்தளபாடங்கள் மூலம் சுமார் 300 பிள்ளைகள் ஆசன நெருக்கடி இன்றிச் சௌகரியமாகக் கல்வி பயில முடியும். தற்போது இப்பௌத்த பாடசாலையில் 250க்கு மேற்பட்ட பிள்ளைகள் கல்வி பயின்று வருகின்றனர்.

சென்ற வியாழக்கிழமை உடுப்பிட்டி வட்டாரக்கல்வி அதிகாரி திரு. மகேஸ்வர ஐயர் இப்பாடசாலைக்கு விஜயம் செய்து பார்வையிட்டார்.

வடபகுதியிலுள்ள தமிழ் சிங்கள பௌத்த பாடசாலைகள் இயங்கிவரும் முறைகளை நேரில் கவனிக்கும் முகமாகக் கல்வி அதிகாரி திரு. குலதுங்கா இம்மாதம் 24-ம் திகதி மீண்டும் யாழ்ப்பாணம் வரவிருப்பதாகவும் தெரியவருகிறது.

## புங்குடுதீவில் கூட்டுறவு வங்கிக் கிளை

புங்குடுதீவு, திங்.

புங்குடுதீவில் கூட்டுறவு வங்கிக்கிளை ஒன்றை நிறுவுவது சம்பந்தமாக கூட்டுறவு ஆணையாளர் குழு ஆராய்ந்து வருகிறது. புங்குடுதீவு, நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு மக்களின் நலன்கருதி புங்குடுதீவில் கூட்டுறவு வங்கிக் கிளை ஒன்றை நிறுவும்படி புங்குடுதீவு கல்வி வளர்ச்சிக் கழகம் கூட்டுறவு ஆணையாளரிடம் கேட்டிருந்ததைத் தொடர்ந்து இவ்வித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதுசம்பந்தமாக புங்குடுதீவு பொது மக்கள் சார்பிலும் ஒரு தூதுக்குழு கூட்டுறவு ஆணையாளரைச் சந்தித்துப் பேசியது.

—

## பாடசாலைக்கு வெளியே இருந்து கல்வி

புலோலி, ஞாயிறு

வடமராட்சி பகுதியில் உள்ள பெரும்பாலான பாடசாலைகளில் போதிய கட்டட வசதி இல்லாததால் பல பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் வெளியேயிருந்து கல்வி கற்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

## சிந்தாத்திரை மாதா திருநாள்

ஊர்காவற்றுறை, ஞாயிறு

தீவுப்பகுதியில் உள்ள யாத்திரைத்தலங்களில் ஒன்றான வேலணை சாட்டி சிந்தாத்திரை மாதா தேவாலய வருடாந்த உற்சவம் நாளை மறுதினம் கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகிறது.

தினமும் ஆராதனைகள் மண்டைதீவு கட்டளைக்குரவர் வண. பிதா. எஸ். ஏ. ஞானப்பிரகாசம் சுவாமிகளால் நிறைவேற்றி வைக்கப்படும்.

இம்மாதம் 24-ம்திகதி மாலை திவ்விய சற்பிரசாத சுற்றுப் பிரகாரத்துடனும் 24-ம்திகதி காலை பெரிய பாடல் பூசையுடனும், திருச்சொரூப சுற்றுப்பிரகாரத்துடனும் உற்சவம் முடிவடையும்.

23-ம், 24-ம் திகதிகளில் யாழ்ப்பாணம், இறுப்பிட்டி, ஊர்காவற்றுறை ஆகிய இடங்களிலிருந்து இத்தேவாலயத்துக்கு விசேட பஸ் சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ம ணி வா க் கு

'உண்மையான எந்தக் காரியத்தையும் சாதிப்பதற்கு முதல்படியாக நமது நெஞ்சத்தில் அஞ்சாமை வேரூன்றி நிற்கவேண்டும். சமய உணர்ச்சி விழிப்படைந்தால் அன்றி அஞ்சாமை என்ற நிலையை நாம் அடைய முடியாது.'

— மகாத்மாகாந்தி


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம், சௌமிய வருஷம் ஆவணி மாதம் 30-ந் திகதி (15 - 9 - 69)


## திடீர் வேலைநிறுத்தங்கள்

நேற்று முன்தினம் மின்சாரஇலாகா ஊழியர்கள் திடீர்வேலைநிறுத்தம் செய்ததால், பொதுமக்களுக்கு ஏற்பட்ட சங்கடங்கள் கொஞ்சமல்ல அத்துடன் பெற்றோலியம் கூட்டுத்தாபன ஊழியர்களும் வேலைநிறுத்தம்செய்துள்ளனர். இந்த இரண்டையும் பொது நன்மையை முன்னிட்டு அத்தியாவசியசேவை என்று அரசாங்கம் பிரகடனம்செய்ததுதான் அவசரகாலச் சட்டத்தையும் அமுலுக்குக்கொண்டுவந்துள்ளது. இதன் பயனாக மின்சார ஊழியர்கள் வேலைநிறுத்தம் நேற்றுக் காலையுடன் நின்றுவிட்டது. பெற்றோலியம் வேலைநிறுத்தமும் சீக்கிரம் முடிந்துவிடுமென எதிர்பார்க்கிறோம்.

வேலை நிறுத்தத்தைத் தொடர்ந்து பிடிவாதமாக நீடிக்காமல் ஒரே நாளுக்குள் அதை முடித்துவிட்டமை வரவேற்கத்தக்கது. இன்றேல் பொதுமக்கள் மின்சாரமில்லாமல் தொடர்ந்து அதிக சங்கடத்துக்கு உள்ளாகி இருப்பர். ஆனால் அரசாங்கம் பிரகடனம் செய்தாலும் செய்யாவிடினும் மின்சாரம், பெற்றோலியம் சேவை இக் காலத்திலே பொதுமக்களுக்கு நிரந்தரமாக அத்தியாவசியமானவைகளே. அதில் ஈடுபட்டுள்ள ஊழியர்களின் சேவை பொதுமக்களுக்கு அன்றாட வாழ்க்கைக்கு மிக முக்கியமானது. ஆகவே அவர்களது கடமையும் பொறுப்பும் அதிகமாகும் என்பதை வற்புறுத்தத் தேவையில்லை. அந்த ஊழியர்கள் குறையின்றி இருக்கப் பார்த்துக்கொள்ளவேண்டியது அரசாங்கத்தின் கடமையாகுமென்பது ஒருபுறமிருக்க, அந்த ஊழியர்களும் தங்கள் குறைகளை நீக்கிக்கொள்ள திடீர்வேலைநிறுத்தங்களில் ஈடுபட்டு முயற்சி செய்துபார்த்துவிட்டு, அவை பயனின்றிப் போனால்தான், வேலைநிறுத்தத்தில் ஈடுபடலாம். அந்த ஆயுதம் இருபுறமும் கூருள்ள கத்தி. பொதுமக்களுக்கு முக்கிய சேவை செய்துவரும் ஊழியர்கள், வேலைநிறுத்த ஆயுதத்தை அவசரப்பட்டோ, அனாவசியமாகவோ, பிரயோகிப்பதாயின் பொதுமக்களின் அனுதாபத்தையும் ஆதரவையும் இழக்கநேரிடும்.

கூடுமானவரை இவர்களது குறைகள் வேலைநிறுத்தமில்லாமலேயே தீர அரசாங்கம் பார்த்துக்கொள்ள வேண்டும். வேலைநிறுத்தம் செய்யத்தான் வேண்டுமாயின் அதற்கான போதிய முன்னறிவித்தல் செய்ய வேண்டியது ஊழியர்களின் கடமை. திடீர்வேலைநிறுத்தம்செய்வது அரசாங்கத்தையன்றி, பொதுமக்களை ஊழியர்கள் தண்டிப்பதேயாகும். இது சகிக்கப்படக் கூடியதல்ல. இதில் சம்பந்தப்பட்ட ஊழியர் வேலைநிறுத்தம் செய்த காரணங்களைப் பற்றிய விபரம்தெரியவில்லை. இது எப்படியாயினும். இவ்வித பிரச்னைகளை பொதுமக்களின் நன்மையைக் கருதி வேலைநிறுத்தமில்லாமலே தீர்க்க உதவவேண்டியது எதிர்க்கட்சிகளின் கடமையுமாகும்.


பொதுத்தேர்தல்நெருங்குகையில் வேலைநிறுத்தங்கள் அதிகரிப்பது வழக்கம். அது போல் இனி இவ்வித வேலைநிறுத்தங்கள் பெருகுமோ என்று அஞ்சக்கூடியதாகவுள்ளது. பொதுமக்களை இம்சிக்கக்கூடிய வகையில், வேலைநிறுத்தங்களை யார் தூண்டிவிட்டாலும், ஆதரித்தாலும், அவர்கள் பொதுஜன ஆதரவை எதிர்பார்க்க முடியாது. தேர்தலில் வெல்லும்பொருட்டு, வீணாக வேலைநிறுத்தங்களை ஆரம் [illegible]

## மலரும் கனியும் கொண்டு வணங்கி

# விநாயகர் அனுக்கிரகம் பெறுவோம்

**இன்று விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது.**

பண்டுதொட்டு சைவமக்கள் எத்தொழிலைத் தொடங்குமுன்னும் விநாயகப்பெருமானை வழிபட்டுத் தொடங்குவது வழக்கம். விநாயகருடைய அனுக்கிரகம் கிடைக்கப்பெற்றோமானால் நாம் தொடங்கும் தொழில்கள் யாவும் எமக்கு வெற்றியைக் கொடுக்கும் என்பதே இதற்குக் காரணம். சுப்பிரமணியக் கடவுள் வள்ளியம்மையாரை மணம்செய்யச் செல்லும்போது தமது தமையனாரை வணங்கிச்செல்லாமையால்ஏற்பட்ட கஷ்டங்களும் அதன்பின் சுப்பிரமணியக் கடவுள் தமது பிழையைப் பொறுத்தருளும்படி விநாயகரைவேண்டிக்கொண்டதும் யாவரும்அறிந்ததே. எனவே அவருடைய சதுர்த்தி தினத்தில் அவரை வணங்கி அவருடைய அனுக்கிரகத்தைப் பெறுதல் சாலவும் சிறந்ததொன்றாகும்.



### தோற்றம்

பரம்பொருள் ஒன்று அதன் பேதம் அனந்தம். ஒன்று விநாயகக் கடவுள் திருவுருவபேதம். இவர் பிரணவ சொரூபி. ஆன்றோரும் பிரணவத்திலிருந்துதான் உலகம் உண்டாயிற்று என்பர். இவர் தோற்றத்தைப் பல புராணங்களும் பலவகையாகக்கூறும். நமக்கு ஆதாரமாகக் கொள்ளத்தக்கவகையில் கூறும் புராணங்கள் இரண்டு. ஒன்று கந்தபுராணம், அடுத்தது காஞ்சி புராணம். அதில் கந்தபுராணத்தில் அவருடைய தோற்றம் 'அக்கனித் தாயிடை' என்று தொடங்கும் பாடலில்கூறப்படுகிறது. அதன் சாரம் திருக்கயிலை நந்தவனத்திலிருந்த சித்திரமண்டபத்தில் ஒரு பிரணவம் எழுதப்பெற்றிருந்தது அதனை உமாதேவியார் உற்று நோக்கினர். பிரணவம் களிறும், பிடியுமாக மாறிப்புணர்ந்து யானை முகத்தோடு கூடிய விநாயகர் தோன்றினர் என்பதாகும். காஞ்சிப் புராணத்தில், பரமசிவனும் பார்வதிதேவியாரும் ஒருசமயம் திருக்கயிலையில் மந்திரங்கள் எழுதியிருந்த மண்டபத்தைச் சார்த்தனர். அங்கே எழுதப் [illegible] யானையாகவும் மாறிப்புணர்ந்து யானை முகத்தோடு கூடிய விநாயகப் பெருமான் தோன்றியருளினர் என்று கூறுகிறது.

### திருவுருவம்

விநாயகருக்கு யானைமுகமும், மூன்று கண்களும், இரண்டு செவிகளும், ஐந்து கரங்களும், பெரிய வயிறும் இரு குறுகிய திருவடிகளுமுண்டு. யானைமுகம்பெருமான் பிரணவவடிவினன் என்பதைக்காட்டும். ஐந்து கரங்கள்தானே ஐந்து கிருத்தியங்[களை]யும் செய்பவர் என்ப[தை]விளக்கும். மூன்று கண்கள் சூரிய, சந்திர, அக்கினிகளை உணர்த்தும். விசாலமான இ[illegible] ஆன்மாக்க[illegible] தாக்க[illegible]ல் காத்து வினை [illegible]

பார்க்க ஆசையை உண்டு பண்ணும். எனவே ஆன்மாக்கள் எத்தனை முறை விநாயகரைப் பார்த்தாலும் சலிப்படைய மாட்டார்கள் என்பதைக் குறிக்கும். விநாயகர் என்பதன் பொருள் யாதெனில், தனக்கு மேல் ஒரு தலைவரில்லாதவர் என்பதாகும். இவரைப் பக்தர்கள் பல பெயர் கொண்டழைத்து வழிபடுவர். கஜானனன், விக்கினேஸ்வரன், பிள்ளையார், மோதகஸ்தன், கணபதி என்பன இவருடைய சிறப்புப் பெயர்கள் [ஆ]கும். கணங்களுக்குத் தலைவராகையால் கணபதி என்ற பெயர்கொண்டு அழைக்கப் [illegible] [illegible]யார் என்றதும், தம்பியாருக்குச் சேரவிட[illegible]

ஏறி, உலகத்தைச் சுற்றி வரச் சென்றதும், பிள்ளையார் அம்மையையும், அப்பரையும் சுற்றிவந்து மாம்பழத்தை பெற்றுக்கொண்ட வரலாறு யாவரும் அறிந்ததே. இதை நாம் வெறும் கதையாகக் கேட்டு விட்டுவிடுகிறோம். இதனுள் பொதிந்திருக்கும் உண்மைத் தத்துவத்தை உணர வேண்டும். எல்லாம் வல்ல கடவுளாகிய பிள்ளையாருக்கு இன்னொரு மாம்பழத்தைப் பெறக்கூடிய வல்லமை இருந்தது. தம்பிக்காக விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை இருந்தது அல்லது பிள்ளையாருக்குத் தோன்றிய தந்திர புத்தி சுப்பிரமணியக்கடவுளுக்குத் தெரியாமலில்லை. பின் யாது காரணமென்று சிந்தித்தோமானால் உண்மை புலனாகும். பிள்ளையார், பரம்பொருளை அம்மையப்பரில் மாத்திரம் கண்டார். ஆனால் சுப்பிரமணியக் கடவுள் எல்லாப் பொருள்களிலும் பரம்பொருளைக் கண்டார் என்ற உண்மைத் தத்துவத்தை நாம் உணரவேண்டும்.

### விநாயக விரதங்கள்

இப்பெருமானுக்குரிய விரதங்கள் மூன்று. ஒவ்வொரு வாரத்தில் வரும் வெள்ளிக்கிழமையும், விநாயக சஷ்டியும், ஒவ்வொரு மாதத்திலும் வரும் வளர்பிறைச் சதுர்த்தியும், சிறப்பாக ஆவணி மாத வளர்பிறைச் சதுர்த்தியுமாம். இதுவே 'விநாயக சதுர்த்தி' என வழங்கப்பட்டு வருகிறது.

### வழிபாடு செய்யும்முறை

விநாயக சதுர்த்தியன்று காலை புற்றுமண்ணினால் விநாயகப் பெருமான் திருவுருவத்தை அமைத்து, அதில் அப்பெருமானை மந்திரத்தால் எழுந்தருளப் பண்ணி, அலங்கரித்து நிவேதனப் பொருள்களை அவர் முன்வைத்துப் போற்றித் துதித்தல்வேண்டும். அப்பெருமானுக்குரிய மலர்கள் கொன்றை, தும்பை, வன்னி எருக்கு, அறுகு முதலியன. வாழை, மா, பலா, கரும்பு மோதகம், அவல், பொரி, விளாம்பழம் முதலியன அவரது நிவேதனப் பொருள்களாகும். மறுநாள் அத்திருவுருவத்தை உத்வாசனம் செய்து குளத்தில் விடவேண் [illegible]

# ஐயாறன் எழுதுவது

மின்சார வேலைநிறுத்தம் காரணமாக, நேற்று 'ஈழநாடு' பத்திரிகை வெளிவர முடியாதோ என்று அஞ்சினோம். பல அன்பர்கள் ஆவலுடன் டெலிபோன் செய்து கேட்டார்கள்.

என்ன செலவானாலும், எப்படியும் பத்திரிகை தடைபடாமல் வெளிவர வேண்டுமென்ற எங்கள் ஆவல் திருவருளால் நிறைவேறியது. இது மிக மகிழ்ச்சியும் பெருமையுமளிப்பதாகும்.

மாலையில் திடீரென மின்சாரம் நின்றதும் விளக்குகள் அணைந்தன விசிறி நின்றது. மெஷின்கள் ஓடவில்லை. ரேடியோ பேசவில்லை. இக்காலத்தில் மின்சாரத்தை நம்பித்தானே நம்மில் பலரும் வாழுகின்றோம்.

0 0 0

சற்றே திகைத்திருக்கையில் ஓரன்பர் வந்து, நீர்வேலியல் எங்களுக்குத் தேவையான மின்சாரஜெனரேட்டர் இருப்பதாகச் சொன்னார். உடன் அங்கு சென்று விசாரித்து அதற்கேற்பாடு செய்தோம். மெஷின் ஓடுமோ என்று கடைசிவரை கவலை. நல்லவேளை மெஷின் ஓடியது. பேப்பரும் வெளிவர முடிந்தது.

இப்படிவேலைநிறுத்தம்நடக்கப் போகிறதென்று முன்கூட்டியே தெரிந்திருந்தால் இதற்கான எல்லா ஏற்பாடுகளையும் முதலிலேயே செய்திருக்கலாம் போகட்டும்.

இனி எக்காரணம்பற்றியும் மின்சாரம் நின்றாலும் பத்திரிகையை வழக்கம் போல் வெளியிட முடியுமென்ற புதியநம்பிக்கையை இந்த அனுபவம் அளித்துள்ளது.

மின்சாரம் நேற்று அதிகாலை திடீரென மீண்டும் வந்துவிட்டது. விளக்குகள் எல்லாம் எரிந்தன. இருள் அகன்றது. டெலிபோன் செய்து கேட்டதில் வேலைநிறுத்தம் முடிந்துவிட்டதாக மின்சார காரியாலய ஊழியர் தெரிவித்தார். இது ஓர் அடையாள வேலைநிறுத்தம்தானும். இத்துடன் அவர்களது குறைகள் தீர்வதுடன், எக்காரணம்பற்றியும் பொதுமக்களாகிய நம்மை அவர்கள் இனி இவ்வித கஷ்டங்களுக்கு உட்படுத்தக் கூடாதென்று வேண்டுகிறோம்.

0 0 0

1931ம் வருஷம் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் [illegible] அறிவிக்கவில்லை. மன்னர் அடிகளுடன் கைகுலுக்கினரென்றாலும் மகாராணி 'அரைகுறையாக உடுத்த இந்திய'ரிடமிருந்து தமது கையை இழுத்துக்கொண்டு விட்டாராம்.

பின்னர் காந்திஜியை மண்டபத்தின் வேறு பகுதிக்கு அழைத்துச் சென்றனர். மன்னர் பரபரப்புடனும் கோபத்துடனும் காந்தியை அணுகி, 'ஆபிரிக்காவில் நீங்கள் பிரிட்டிஷ் நண்பராக இருந்தீர். இப்போது எனக்கும் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கும் மாறாக ஏன் மாறிவிட்டீரென்பது எனக்குப் புரியவில்லை. இந்தியாவில் நீங்கள் கிளர்ச்சி செய்து எனது அரசாங்கத்துடன் ஒத்துழைக்காவிட்டால் அங்குள்ள எனது இராணுவம் எல்லாக் கிளர்ச்சிக்காரரையும் சதிகாரர்களையும் தவிடுபொடியாக்கிவிடுமென உங்களை எச்சரிக்கிறேன்' என்றார்.

மகாத்மா ஒன்றும் பேசவில்லை. பின்னர் மன்னர் வேறு விருந்தினரிடம் பேசினார். சற்று நேரத்துக்குப் பின் மகாத்மா வட்டமேசை மகாநாட்டிலே பேசுகையில் 'ஒரு பிரிட்டிஷ் கனவான்' இப்படி எச்சரித்ததாகக்கூறி, "பிரிட்டிஷ் வெடிகுண்டுகளையும், துப்பாக்கிகளையும் வெறும் பட்டாசுகளாகவே எனது மக்கள் மதிக்கிறார்கள்" என்றார்!

மகாத்மாவை எச்சரித்த மன்னர் மறைந்துவிட்டார். 38 வருடம் கழித்து அதே பிரிட்டிஷ் அரசாங்கம், மகாத்மாவின் நூறாவது ஜயந்தியை முன்னிட்டு விசேஷ தபால் தலையை வெளியிட்டு கௌரவித்துள்ளது. பிரிட்டிஷ் பார்லிமெண்டிலே மகாத்மாவைப் பாராட்டி ஆறு எம்.பி. மார்கள் கொண்டுவந்த கீழ்க்கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியுள்ளது

மகாத்மாவின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் இச்சமயத்திலே, அவர் இந்தியாவின் மக்களுக்கும் உலகுக்கும் செய்துள்ள மகத்தான தொண்டையும் அவரது எளிய வாழ்க்கையையும், பிறர் உணர்ச்சிகளை அவர் பெரிதும் மதித்து உலகுக்குக் காட்டியதையும், மனித சகோதரத்துவத்தின் முக்கியத்தையும், பலாத்காரத்தை நிராகரித்ததையும், சமாதான விருப்பத்தையும், இந்த சபைபாராட்டி, எழுத்து மூலம் பதிவு செய்ய விரும்புவதுடன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப் பார்த்துக்கொள்ளவேண்டியது அரசாங்கத்தின் கடமையாகுமென்பது ஒருபுறமிருக்க, அந்த ஊழியர்களும் தங்கள் குறைகளை நீக்கிக்கொள்ள திடீர்வேலைநிறுத்தங்களில் ஈடுபட்டு பொதுமக்களை வீண் இம்சைக்கு உள்ளாக்குவது சற்றும் சரியல்ல.

தொழிற்சங்கச் சட்டப்படி, வேலைநிறுத்தம்செய்ய சாதாரணமாக எல்லா ஊழியருக்கும் உரிமையுண்டுதான். ஆனால் அதை அவர்கள் கடைசி ஆயுதமாகத்தான், மற்ற எல்லா வழிகளிலும் வேலைநிறுத்தங்களை யார் தூண்டிவிட்டாலும், ஆதரித்தாலும், அவர்கள் பொது ஜன ஆதரவை எதிர்பார்க்க முடியாது. தேர்தலில் வெல்லும்பொருட்டு, வீணாக வேலைநிறுத்தங்களை ஆரம்பித்து நீடிக்க யாரும் முற்பட்டால் அது ஏமாற்றத்தில்தான் முடியும். இதற்கு மாறாக பொதுஜனநன்மையில் அக்கறை இருப்பவர்கள் இவ்வித திடீர் வேலைநிறுத்தங்கள் ஏற்படுவதைத் தடுக்க எல்லா முயற்சிகளும் செய்யக் கடமைப்பட்டுள்ளனர்.

# மட்டக்களப்பில் கலைவிழா நாளை ஆரம்பம்

## மூன்று தினங்கள் நடைபெறும்

மட்டக்களப்பு, ஞாயிறு

மட்டக்களப்பு பிரதேச கலாமன்றம் ஒரு மாபெரும் கலைவிழாவை இம்மாதம் 16-ம், 17-ம், 18-ம் திகதிகளில் மட்டக்களப்பு மைதானத்தில் புதிதாக நிறுவப்பட்டுள்ள திறந்த வெளி அரங்கில் கோலாகலமாக நடத்துகின்றது. மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட சிறந்த பாடசாலைகளது சங்கீத, நடன நாடக நாட்டுக்கூத்து, நிகழ்ச்சிகளும், நாடக மன்றங்களினது நாடக நாட்டுக்கூத்து நிகழ்ச்சிகளும் இடம்பெறவிருக்கின்றன. தொழில் அமைச்சர் ஜனாப் எம். எச். முகம்மது பிரதம விருந்தினராக நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளுவார்.

18-ம் திகதி காலை மட்டக்களப்பு நகரமண்டபத்தில் அண்ணாவிமார் மகாநாடு நடைபெறும். இது மட்டக்களப்பின்சரித்திரத்திலேயே முதன் முதலாக இடம் பெறுகிறது. ஊர்வலமாக அழைத்துவரப்படும் அண்ணாவிமார் பதினான்குபேர் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படுவார்கள். இராம நாடகம், அனுவுருத்திர நாடகம் ஆகிய இரு நாட்டுக்கூத்து நூல்களும் பிரதேச கலாமன்றத்தினால் வெளியிட்டு வைக்கப்படும்.

மட்டக்களப்பு பிரதேச கலாமன்றத் தலைவரான மட்டக்களப்பு மாவட்ட அரசாங்கஅதிபர் திரு. தேவநேசன் நேசையா கலைவிழா குழுவுக்கு அனுப்பிவைத்துள்ள ஆசிச் செய்தியில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

இப்பகுதியிலுள்ள கலைகளையும் கலைஞர்களையும் ஊக்கப்படுத்தி வளர்க்கும் முகமாக மட்டக்களப்பு பிரதேச கலாமன்றம் மேற்கொண்டுவரும் முயற்சிகளுக்கு பொதுமக்களின் பூரணஆதரவு என்றென்றும் உண்டென நம்புகிறேன். நமது பாரம்பரியக் கலைகளைப் பேணி வளர்ப்பதில் நாம் அனைவரும் உற்சாகத்துடன் ஈடுபடுவது விரும்பத்தக்கதாகும்.

இக் கலைவிழாவைக் கண்டு களிப்பது மாத்திரமல்ல, நமதுகலைகளை மேன்மேலும் வளர்க்கவேண்டும். ஆதரிக்கவேண்டுமென்ற சங்கற்பத்துடன் அனைவரும் செயலில் ஈடுபடவேண்டுமென பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.''

# அருணகிரிநாதர் விழா

காங்கேசன்துறை, ஞாயிறு

மாவிட்டபுரம் முத்தமிழ்க் கலை மன்றத்தினர் அருணகிரிநாத சுவாமிகள் விழாவையும், தமது மன்றத்தின் 14-ம் ஆண்டு நிறைவு விழாவின் போது நடத்த ஏற்பாடுகள் செய்துள்ளனர்.

விழாவுக்கு முன்னைநாள் வவுனியா ஆட்சி மன்ற உறுப்பினர் திரு. செ. சுந்தரலிங்கம் தலைமைதாங்கவிருக்கிறார்.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் தெற்கு வீதியிலுள்ள அருணகிரிநாதர் மண்டபத்தில் இன்றும் நாளையும் விழா நடைபெறுகிறது. பல அறிஞர்களின் சொற்பொழிவும் இசை கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

கா தோன்றினார் என்பதாகும். காஞ்சிப் புராணத்தில், பரமசிவனும் பார்வதிதேவியாரும் ஒருசமயம் திருக்கயிலையில் மந்திரங்கள் எழுதியிருந்த மண்டபத்தைச் சார்ந்தனர். அங்கே எழுதப் பெற்றிருந்தபிரணவத்தைக் கண்டனர். சமஷ்டிப் பிரணவம்பிரிந்து ஆண்டவன் எழுத்தாகிய 'அகரம்' ஆண் யானையாகவும், அம்மை எழுத்தாகிய 'உகரம்' பெண்

என்பதனை விளக்கும். மூன்று கண்கள் சூரிய, சந்திர, அக்கினிகளை உணர்த்தும். விசாலமான இரண்டு செவிகள், ஆன்மாக்களை மலவாதனை தாக்காமல் காத்து வினை வெப்பத்தைப் போக்கியருளும் என்னும் உண்மையை உணர்த்தும், பெருவயிறு எல்லா அண்டங்களும், உயிர்களும்தன்னுளடங்கியுள்ளன என்ற தத்துவத்தைக் குறிக்கும். யானை முகம் பார்க்கப்

கும். கணங்களுக்குத் தலைவராகையால் கணபதி என்ற பெயர்கொண்டு அழைக்கப்படுகிறார்.

பிள்ளையார் என்றதும், தம்பியாருக்குச் சேரவிடாமல் மாம்பழத்தைத் தட்டிப் பறித்தவர் என்ற எண்ணந்தான் தோன்றும். இறைவனிடமிருந்து மாம்பழத்தைப் பெற்றுக்கொள்வதற்காகச் சுப்பிரமணியக் கடவுள் மயில் வாகனத்தில்

வாழை, மா, பலா, கரும்பு மோதகம், அவல், பொரி, விளாம்பழம் முதலியன அவரது நிவேதனப் பொருள்களாகும். மறுநாள் அத்திருவுருவத்தை உத்வாசனம் செய்து குளத்தில் விடவேண்டும். இம்முறையைப் பிழையறாமல் கடைப்பிடித்து விநாயகரின் அனுக்கிரகத்தைப் பெறுவோமாக.

—விமலி

இன்று அண்ணா பிறந்ததினம்

## கார் உள்ள அளவும், பார் உள்ள அளவும் நீர் உள்ளஅளவும்

# தமிழர் நெஞ்சில் அண்ணா வாழ்வார்

''ஊருக்குழைத்திடல் யோகம்-நலம்
ஓங்கிடுமாறு வருந்துதல் யாகம்
போருக்கு நின்றிடும் போதும்-உளம்
பொங்கலிலாத அமைதி மெய்ஞானம்''

என மகாகவி பாரதி பாடியதற்கொப்ப அமரர் அண்ணா அவர்கள் சிந்தையனு ஒவ்வொன்றும் செந்தமிழ்க்கும், பிறந்த பொன்னாட்டிற்கும் என இடையறாது எண்ணி எண்ணி, தொடர்ந்து தொண்டாற்றி, கொண்ட இலட்சியத்தை முழுமையாக அடையாவிட்டாலும் ஓரளவாவது அடைந்தார்.

**சீர்திருத்தச் செம்மல்**

அழகொளிரும் ஆங்கிலத்தில் மோனை மிளிரப்பேசிடவும் எழுதிடவும் ஆற்றல் பெற்ற அண்ணா, மற்றைய ஆங்கிலமோகம் கொண்ட தலைவர்களைப்போல தமிழைத் துறந்து, ஆங்கிலத்துக்கு ஆக்கம் தந்தவரல்ல. தனது தாய்மொழியும் தாய்நாடும் ''தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிக் கெட்டு பாழ்பட்டு நின்ற'' பரிதாபநிலையை நினைந்து நினைந்து நாளும் உருகினார். தெளிந்த அரசியல் அறிவையும் பண்பட்ட உணர்வையும் ஊட்டினாலன்றி மக்கள் கிளர்ந்தெழுந்து நாட்டையும் மொழியையும் காத்திடப்போர்க்களத்தில் குதிக்கமாட்டார்கள் என்பதை நன்கு உணர்ந்தமையால் தான் முதலில் கருத்துப் புரட்சிக்கு வித்திட்டார். தமிழினத்தைப் பன்னெடுங் காலமாகப் பீடித்திருந்த அரசியல் விழிப்பின்மை, தாய்மொழிப்பற்றின்மை, தீண்டாமை போன்ற பிணிகளை அகற்ற இடையறாது பேச்சு மூலமும் எழுத்து மூலமும் பணியாற்றினார்:

தனிஒருவர் எத்துணை அறிவாற்றல் திறமையுடையவராக விளங்கினாலும், உணர்ச்சித்துடிப்பும், கொள்கைப் பிடிப்பும் தூய சிந்தையும் நாட்டுப்பற்றும் மொழிப் பற்றும் கொண்ட இளைஞர்களின் ஒத்துழைப்பின்றி சமூக சீர்திருத்தத்தையோ அரசியல் விழிப்பையோ ஏற்படுத்தமுடியாது என்பதை உணர்ந்து, செயலாற்றி செந்தமிழ்ச் செம்மல்களின் சிந்தைகளைக் கொள்ளைகொண்டார்.

**துணிவுமிகு தொண்டன்**

மனமயக்கமும் தயக்கமும் தான் இயக்கத்திற்கு தடையாக இருப்பன. அண்ணாவின் நெஞ்சத்தில் மயக்கமோ தயக்கமோ தலைகாட்டவில்லை. துணிவும் தெளிவும் கனிவும் அன்னார் நெஞ்சத்தில் அல்லும் பகலும் அனவரதமும் சுடர்விட்டுப் பிரகாசித்தன. தொண்டர்க்கு ஒளிவிளக்காம் தலைவர் எனத் திகழ்ந்தார். அண்ணாரின் சிந்தை சொல் செயலில் உண்மை ஒளிர்ந்தது.

ஆரம்பத்தில் கொண்ட கொள்கையை மக்கள் ஏற்கவில்லை என்பதற்காக விரக்தி அடைந்தவரல்ல அண்ணா. தேர்தலில் தோல்விகண்ட போதும் துணிவுடனும் தெளிவுடனும் அவர் தொடர்ந்து தொண்டாற்றினார்.

பல ஆண்டுகளாக இடையறாப் பிரசாரத்தின் மூலம் தமது கொள்கையை மக்களுக்குத் தெளிவாக எடுத்து விளக்கினார்.

**பரம்பரையை உருவாக்கியவர்**

தான் கொண்ட இலட்சியத்தை தானடைய வாய்ப்புக்கிட்டாது விட்டாலும், தனக்குப்பின் வாழக்கூடியவர்கள் அடையவேண்டும், நாடும் மொழியும் வாழவேண்டும் என்ற உன்னத எண்ணம் உந்த, அவரவர் அறிவாற்றல் திறமையை அறிந்து அரசியல்துத்துறையிலும், கலைத்துறையிலும் பலரை அறிஞர்களாகவும், நாவலர்களாகவும், கலைஞர்கள் ஆகவும் உருவாக்கினார். அருள் உள்ளம் கொண்ட சான்றோர்தான் மற்றவர்களையும் வளர்த்து, தாமும் வளர்வார்கள். மற்றவர்கள் வளர்ந்து தம்மையும் மிஞ்சிவிடுவார்களோ என்ற அச்சம்-அறிவும் அடக்கமும் பொறுமையும், அஞ்சாமையும், செயலாற்றும் திறமையும் கொண்ட அருளாளர் அகத்தில் தோன்றுவதில்லை. எனவேதான் பல இலட்சம் தம்பிமாரைக்கொண்டபரம்பரையை உருவாக்கிய பாக்கியத்தைப் பெற்றார். வலிவும் பொலிவும் மிக்க புதியதோர் நடையையும் தமிழுக்குத்தந்தார்.

**பெரியோரைப் பேணிய பெருந்தகை**

சீர்திருத்தத் தந்தை பெரியாரையும், தமிழகத்தில் தனித்தமிழ் இயக்கத்தை தோற்றுவித்த மறைமலை அடிகளையும், அரசியலிலும், தொழிற்சங்க இயக்கத்திலும் இலக்கிய சமயத்துறைகளிலும் தமிழ்த்தொண்டாற்றிய திரு. வி. கலியாணசுந்தரனாரையும், கம்பராமாயணம், கந்தபுராணம் போன்ற காப்பியங்களின் பலநயங்களையும் அழகுதமிழில், அடுக்குத்தொடரில், அள்ளிஅள்ளி ஈந்த சொல்லின் செல்வர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்களையும் அண்ணா அவர்கள் பல சந்தர்ப்பங்களிலும் நன்றியுடன் போற்றியுள்ளார். நாட்டுணர்ச்சியும் மொழியுணர்ச்சியும்பொங்கி வழியும் கவிதைகளை ஈந்த புரட்சிக் கவிஞர் பாரதிதாசனை நாடறியச்செய்த பெருமையும்அண்ணாவையே சாரும்.

புரட்சிக்கவிஞர் ''தமிழாய்ந்தவன் தமிழ் முதலமைச்சன்ஆதல் வேண்டும்'' எனப் பெரிதும் விழைந்து பாடினார். அவர் விழைந்தது போலவே தமிழ் நாட்டின் தவப்பயனாய், தமிழை ஆய்ந்த, தகைமைவாய்ந்த, தன்னேரிலாத்தண்டமிழ்த் தலைவன் அண்ணா அவர்கள் முதலமைச்சராகி, வரலாற்றுப் பெருமை வாய்ந்த தமிழ்நாடு தீர்மானத்தை நிறைவேற்றி மட்ராஸ் ஸ்ரேட் என்ற ஆங்கிலப் பெயரை மாற்றி அன்னைத் தமிழுக்கு அரியாசனம் தந்தார்.

பல கூறுகளாகப் பிரிந்து நின்று அரசியல் நடத்திய ஆதித்தனாரையும், சிலம்புச் செல்வரையும் இணைத்து ஆட்சியை அமைத்தார். கருத்துவேற்றுமைகொண்ட அரசியல் தலைவர்களுடனும் கண்ணியமாகவே பழகினார். அரசியலில் நாகரிகத்தையும் பண்பையும் புகுத்தினார்.

**தண்ணொளி ஈந்த தன்யன்**

தமிழின் புகழ் தரணியெங்கும் பரவும் வகையில், தமிழ் நாட்டில். பலரும் பாராட்டும் முறையில், தமிழ் ஆராய்ச்சி மாநாட்டை நடாத்தினார். தனது உடலின் உருவும் திருவும் அழிய ஊன் உறக்கமின்றித் தொடர்ந்து தொண்டாற்றித் தமிழுக்கு ஒளி ஈந்தார்.

இனி இவ்வித கஷ்டங்களுக்கு உட்படுத்தக் கூடாதென்று வேண்டுகிறோம்.

0 0 0

1931ம் வருஷம் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அழைப்பின்மீது காந்திஅடிகள், லண்டனுக்கு இரண்டாவது வட்டமேசை மகாநாட்டுக்குச் சென்றிருக்கையில் ஐந்தாம் ஜார்ஜ்மன்னர் தமது பக்கிங்காம் அரண்மனையில் அம்மகாநாட்டுப் பிரதிநிதிகளுக்கெல்லாம் ஒரு வரவேற்பு உபசாரமளித்தார். மகாத்மாவிடம் மன்னர் அச்சமயம் கூறியது இப்போதுதான் ஒரு புத்தகத்தில் வெளியாகியுள்ளது.

காந்தி அடிகள் அரையில் கட்டிய வேட்டியுடன் அரண்மனைப் படிக்கட்டுகளில்ஏறிக் கடைசியாகச் சென்றார். மற்ற விருந்தினரைப்பெயர் சொல்லி அறிவித்ததுபோல் மகாத்மாவின் பெயரை மட்டும் சேம்பர்லேன் பிரபு

முக்கியத்தையும், பலாத்காரத்தை நிராகரித்ததையும், சமாதான விருப்பத்தையும், இந்த சபைபாராட்டி, எழுத்து மூலம் பதிவு செய்ய விரும்புவதுடன், பிரிட்டனிலே காந்தி நூற்றாண்டைக் கொண்டாடும் கமிட்டிக்கு பலத்த ஆதரவளிக்க வேண்டுமென்றும் இச்சபை வற்புறுத்துகிறது''

ஆவிஉலகத்திலே மகாத்மாவை, ஜார்ஜ் மன்னர் இப்போது சந்தித்தால், இது பற்றி என்ன கூறுவாரோ!

0 0 0

ஓதிய ஞானமும் ஞானப் பொருளும் ஒலி சிறந்த,
வேதியர் வேதமும் வேள்வியுமாவன விண்ணு மண்ணும்
சோதியுஞ் செஞ்சுடர் ஞாயிறு மொட்பன
தூமதியோடு, ஆதியும் அந்தமும் ஆன ஐயாறன் அடித்தலமே.

— அப்பர்அடிகள்

## 2-ம் எதிரி..

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

வழ: 1-ம் எதிரியும் நீரும் நல்ல ஒற்றுமையாக இருந்தீர்கள்? ஆம்

வழ: எந்த நேரத்திலும் ஆத்திரம் வரக்கூடியதொன்றும் செய்யவில்லை?- இல்லை

வழ: 2-ம் எதிரியும் நல்லாக நடந்து கொண்டார்?- ஆம்.

இரத்தினம் மனைவி சிவபாக்கியம் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

இரத்தினம் எனது கணவர். 2-ம எதிரி என் சகோதரர். சம்பவம் நடந்த தினம் இரவு 8 மணி போல் இரவுச் சாப்பாடு சாப்பிட்டோம். அதன்பின் சம்பவம் நடந்தது. நான் நித்திரையாகிக்கொண்டிருந்தபோது படலையில் 2-ம் எதிரி 'மணி' என்று என்னைக் கூப்பிட்டார். என்னை வீட்டில் மணி என்று கூப்பிடுவார்கள் நான் எழும்பினேன். அத்தான் எங்கே?'' என்று கேட்டார். அவர் படுத்துவிட்டார் என்று சொன்னேன். என் தம்பி டோர்ச் லைட்டை எடுத்து கணவனின் கன்னத்தில் அடித்தார். கந்தையா மார்க் கண்டு வந்து கத்தியால் குத்தினார். அருமைத்துரை, துரைராஜா ஆகியோரையும் கண்டேன் சம்பவம் நடக்கும் போது எல்லாரும் வீட்டிற்குள்ளிருந்தார்கள். கணவனை வெளியில்போகாமல்காலால் தடுத்தார்கள். அவர் அறைக்குள் விழுந்துவிட்டார். 3-ம், 4-ம் எதிரிகள் காலில்பிடித்துஇழுத்துவெளியில் கொண்டுபோனார்கள். பின் 1-ம் எதிரி வெட்டினார் நான் குளறினேன் குடல் வெளியில் வந்துவிட்டதாக கணவன் கத்தினார். 4 எதிரிகளும் ஓடிவிட்டார்கள். பொலிஸாருக்கு வாக்குமூலமளித்தேன்.

விசாரணை இன்று காலை தொடர்ந்து நடைபெறும்.

கார் உள்ள அளவும், இந்தப் பார்உள்ள அளவும், நீர் உள்ள அளவும் தமிழ்த் தாய் உள்ள அளவும் தமிழர் நெஞ்சில் அண்ணாவாழ்வார்.

'அறவாழி'

## இடமாற்றம்

சங்கானை, ஞாயிறு

மாங்குளத்தில் கடமையாற்றிய விவசாய போதனாசிரியர் திரு. சின்னையா இம்மாதம் தொடக்கம் சங்கானை விவசாய விஸ்தரிப்புக் கந்தோருக்கு பொறுப்பதிகாரியாக இடமாற்றம்பெற்றுள்ளார்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org